www.tamilarangam.net

SUVADIKAL
சுவடிகள்
A Tamil Monthly from Norw




ஐரோப்பிய தமிழர்கள் என்ன நினைக்கிறார்கள்?

ஈழவர் மீது ஜெயா பாய்கிறார்...

முதற் தமிழ் அரசியற் படுகொலை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



மகேன்

கொடிபிடித்து வீதியில்
குழலிசைத்துச் செல்வார்,
இந்நாட்டின் மன்னர்கள்.
கையசைத்து மாடத்தில்
கால்கடுக்க நிற்பான்
இந்நாட்டின் குடிமகன்.

கவச வாகனங்களும்,
காக்கிச் சட்டைக்காரர்களும்
காலுதைத்துச் செல்லும் - பல
சுதந்திரதின வீதிகளில்,
தேசமே தெருவுக்கு வந்து
சுதந்திரத் தேர் இழுக்கும்
வித்தியாசமான வீதி இது.



எட்டுமூலைப் பட்டம் போல்,
எட்டாத உயரங்களில் பறக்கும்
எங்களூர்த் தேசியக் கொடிக்கு,
எத்தனை படைவீரர்
பாதுகாப்பளிப்பார் - இங்கோ
மழலைகளின் கைகளிலெல்லாம்,
தேசத்தின் கொடி.
மக்களின் முகங்களிலெல்லாம்
தேசியக் கொடி.

தொலைத்துவிட்ட தேசத்தை
எண்ணும்போதெல்லாம்
நெஞ்சினில் ஆணியை அடிக்குதே
இச்சிலுவைக் கொடி
எப்போ வருமே
எமக்கென்றொரு மே.17.

மே.17: நோர்வேயின் தேசியதினம்

www.tamilarangam.net

ஈழத்திலிருந்து.

இளைய அப்துல்லாஹ்

# அயல் நாடொன்றில்..



சுவடுகள் 52வது இதழ் ஆசிரியத் தலையங்கத்தில் ஒரு பயங்கரவாதத் தலைவர்' என்ற சிறுதலைப்பிலிருந்த அவரது நாட்டில் தற்போது வாழும் தமிழ் மக்களை அவர் சுதந்திர அயல்நாடொன்றிலேயே, கௌரவமிக்க பிரஜைகளாகச் சந்திக்க நேரிடும்' எனும் தத்துவார்த்தமான, உணர்ச்சிபூர்வமான வரிகளைப் பார்த்த மாத்திரத்தே உள்ளத்தில் ஒருவகைக் கிளர்ச்சி ஏற்பட்டு சில நிமிடங்கள் அதே வாக்கியத்தில் சிந்தனை குவிந்து விலக மறுத்த நினைவுகளோடு, எனது இந்தச் சிறுகதையை உணர்வுகளால் பிரசவித்தேன்.

யாழ்ப்பாணம் விழாக்கோலம் பூண்டிருந்தது. வீரசிங்க மண்டபம் மின்னொளியால் அலங்கரிக்கப் பட்டிருந்தது. றீகல் தியேட்டரடி, பஸ் ஸ்ராண்ட், அப்படியே வின்சர் தியேட்டரடி ஏன் முழு யாழ்ப்பாண நகரத்தில் எங்கும் அயல்நாட்டுத் தலைவரின் 'கட்அவுட்'கள் வைத்து "எங்கள் அயல்நாட்டுத் தலைவரே வருக வருக... ஈழ மண்ணில் உங்கள் வரவு நல்வரவாகுக..." என்ற வசனங்களாலும் இன்னும் பல வாழ்த்துப் பாக்களாலும் எழுதி நிரப்பப்பட்டிருந்தன.

தமிழர் முகங்களிலெல்லாம் மகிழ்ச்சி. முஸ்லிம்கள் கிறிஸ்தவர்கள் எல்லோருக்கும் குதூகலம். இன்னொரு நாட்டுத் தலைவர் எங்கள் பூமிக்கு சிறப்பு விருந்தினராக வருகிறாரே என்ற மனமகிழ்வு. அவர் வேறு யாருமல்ல... எங்கள் அயல்தேசத்தின் ஜனாதிபதி ராகுல வீரவன்ச அவர்கள். இப்பொழுதெல்லாம் இலங்கைத் தீவு மாங்காயைப் போலில்லை. முன்பு ஸ்ரீலங்கா என்றிருந்த நாடு இப்போது தமிழீழம் ஸ்ரீலங்கம என்ற இரு நாமங்களைச் சூடிக்கொண்டு தனித்தனியாய்க் கைகுலுக்கிக் கொள்கிறது. உலகப் படத்திலும் அப்படித்தான் அங்கீகாரம்.

அந்த விசேட ஹெலிகொப்டர் முற்றவெளியில் ஓரமாக இறங்குகிறது. தயாராக இருந்த தமிழீழ இராணுவத்தினரின் பாதுகாப்பு அயல்நாட்டுத் தலைவருக்காய் சம்பிரதாயப் படுத்தப்படுகிறது. அது தேவையில்லாத

-/...

www.tamilarangam.net

ஒன்றுதான். பின்னர் மரியாதை வேட்டுகள் தீர்க்கப் படுகின்றன. பலம் பொருந்திய காலாட்படை, குதிரைப்படை, விமானப் படை, கடற்படை அணிவகுப்புகளை ஜனாதிபதி ராகுல அவர்கள் மரியாதையுடன் ஏற்றுக் கொள்கிறார்கள். தமிழீழ ஜனாதிபதி ராமகிருஸ்ணன் அவர்கள் மிகுந்த மரியாதையுடனும் பேரன்புடனும் அயல்நாட்டு ஜனாதிபதியவர்களை வரவேற்று அழைத்துச் சென்று மேற்படி மரியாதை அணிவகுப்புகளைக் காண்பித்து முடிந்ததும் முத்தவெளியில் தபால் அலுவலகத்தை முன்னோக்கிக் கட்டப்பட்ட விசேடமாகத் தயாரிக்கப்பட்ட அலங்காரச் சிம்மாசனத்தில் அமரவைக்கிறார். தானும் அவரருகில் அமர்ந்துகொள்கிறார்.

ஒரே மேடையில் ஸ்ரீலங்கம ஜனாதிபதி ராகுல வீரவன்சவும், தமிழீழ ஜனாதிபதி கார்த்தி.ராமகிருஸ்ணனும் இணைந்திருக்கின்ற காட்சி கண்கொள்ளாததாக இருக்கிறது. எத்தனையோ பேர் இதைக்கண்டு அழுகின்றனர். "கடவுளே இதுக்குத்தானே இத்தினை உயிர்களையும் பலியாய்க் குடுத்தது. போராட்டம் எண்டும் போர் எண்டும் நாங்களெல்லாம் லைற், தண்ணியில்லாம, ஒரு நேரம் திண்டு ரெண்டு நேரம் தின்னாம, எங்கட பொண்டுகளிலை எத்தனைபேர் புருசனைத் தின்னியள், எத்தினைபேர் தாயைத் தின்னியள், தேப்பனைத் தின்னியள் இருக்கினம். அது மட்டுமே விவசாயம் செய்ய வழியில்லாம வேறை ஒண்டையும் செய்யமுடியாம, வயல்வழிய போகக் கண்ணி வெடிக்குப் பயந்து..... எங்களோடை குடும்பத்தோடை குடும்பமா வாழ்ந்துகொண்டிருந்த முஸ்லிம் சனங்களைப் பிரிஞ்சு பல்கலைக்கழகம் எண்ட வாசனையே இல்லாம, அரிவரி கூடப்படியாம துவக்கைத் தூக்கிக்கொண்டு குமருகளும் குஞ்சுகளும் உசிரைக் குடுத்தது இதுக்குத்தானே........

ஒவ்வொரு மனங்களும் நினைத்து நினைத்து அழுதுகொண்டிருந்தன. எல்லோருடைய எண்ணங்களிலும் இந்த நினைவுகள்தான் சூழ்ந்து கொண்டிருந்தன.

கூட்டத்திற்கு தமிழீழ நாட்டிற்கான முஸ்லிம் கலாச்சார பண்பாட்டு மொழி வளச் சிறப்பலுவல்கள் அமைச்சர் கலாநிதி மொஹமட் அவர்கள் தலைமை தாங்கியிருந்தார்.

"இப்பொழுது எமது சிறப்பு விருந்தினரும் எமது அயல் நாடான ஸ்ரீலங்கமவின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியுமான ராகுல வீரவன்ச அவர்களைச் சொற்பொழிவாற்றுமாறு அன்புடன் அழைக்கிறேன்" தலைவர் அறிவித்து முடிந்ததும் கரகோசம் வானைப் பிளந்தது. இந்தத் தமிழீழ நாட்டு மக்களின் அன்பினால் வீரவன்ச கண்கலங்கி விட்டார்கள். அவர் சிங்களத்தில் உரையாற்ற அமைச்சர் மொஹமட் அவர்கள் மொழிமாற்றம் செய்துகொண்டிருந்தார்.

என் இனிய உடன்பிறப்புகளான தமிழீழ நாட்டுச் சகோதரர்களே! சகோதரிகளே!! (மீண்டும் மகிழ்ச்சியின் உச்சமாக சபையோர் கைகளைத் தட்டி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்) இங்கு குழுமியிருக்கும் இலட்சக் கணக்கான உங்களைப் பார்க்கும்போது என் மனது ஒருமுறை விம்மியழுகிறது. காரணம் இத்தனை அன்புக்குரியவர்களோடுதானா எமது முன்னவர்கள் போர் புரிந்தார்கள். இவ்வளவு அன்புக்குரியவர்களையா எமது இராணுவம் கண்மூடித் தனமாகக் குண்டுகளை வீசியும், பீரங்கிகளைப் போட்டும், சுட்டுத் தள்ளியது; சாகடித்தது? என்று எண்ணும்போது என்னால் வாளாவிருக்க முடியவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


ஆனாலும் எனக்கு முன்னிருந்தவர்களை நீங்கள் எல்லோருமாகச் சேர்ந்து கடுமையான முயற்சியின் பேரிலேயே வென்றெடுத்த இந்தத் தமிழீழ நாடானது உங்களுக்கான முதுசம் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை என்றாலும் நான் இந்த வேளையில் ஒரு துரதிர்ஸ்டசாலிதான். ஏனெனில் இந்த அருமையான மக்களை என்நாட்டு மக்கள் என்று பெருமைப்பட முடியாதுள்ளது. அடுத்து இங்கு நீங்கள் எவ்வளவு அழகாக தமிழர்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் என்று இணைந்து வாழ்கிறீர்கள். இதற்கெல்லாம் பெருமைப்பட்டுக் கொள்ளவேண்டியவர் எனது சகோதரர் உங்கள் நாட்டின் ஜனாதிபதி கார்த்தி.ராமகிருஸ்ணன் அவர்களே.

வேண்டாத யுத்தம் ஒன்றினால் நாங்கள் பிளவுபட்டுப் போனோம். இனி ஒன்றுமே செய்யமுடியாது. ஆனால் நாமெல்லாம் சகோதரர்கள்" என்றும், இன்னும் பேசித் தனது பேச்சைத் தமிழீழத் தலைவரையும், ஏனைய பாராளுமன்ற அங்கத்தவர்களையும், தமிழீழ மக்களையும் வாழ்த்தி முடித்துக் கொண்டார்.

இறுதியாக தமிழீழ ஜனாதிபதி கார்த்தி.ராமகிருஸ்ணன் பேசினார்.

"எமது நாட்டின் இறைமையையும், பூரணத்துவத்தையும் பாதுகாக்க நாம் மேற்கொண்ட யுத்தப் பிரிவுகளை இன்னும் நினைத்துக் கொண்டுதான் இருக்கிறோம். ஆனால் சிங்கள ஸ்ரீ எதிர்ப்பிற்கு வித்திட்ட 'பண்டாரநாயகாவி'லிருந்து எமது நாட்டு மக்களும் அயல்நாடான ஸ்ரீலங்கமவின் மக்களும் வேண்டாத குரோதிகளாக மாறினர். பல யுத்தக் களங்களில் தமிழ், சிங்கள உடல்களில் இருந்து இரத்தமும் உயிரும் பீறிட்டுப் பாய்ந்தன.

பொருத முடியாத சிங்கள அரசாங்கம் தோற்றதன் விளைநிலமே எமது ஈழம். இந்த ஈழநாட்டின் பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கும், கல்வித் துறையில் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கும் என் சகோதரர்களாகிய உங்களது உழைப்பும் ஊக்கமுமே





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net


முக்கியம்" இதற்கு "ஆம் எமது ஈழத்தைக் கட்டியெழுப்புவோம், அதற்காக நாம் எதனையும் தரச் சித்தமாயிருக்கிறோம்" என்று மக்களவையில் எழுந்த கோசத்தைக் கண்டு சிறிலங்கம ஜனாதிபதியே பிரமித்துப் போனார். (அவருக்கு மொழிபெயர்த்துச் சொல்லப் பட்டது).

வரவேற்புக் கூட்டம் இனிதே மாலை 5.15மணிக்கு நிறைவுற்றது. ஸ்ரீலங்கம ஜனாதிபதியின் ஹெலிகொப்டர் மெல்ல மெல்ல கொழும்பு வான்பரப்பை நோக்கி ஓடி மறைந்தது.

உண்மையில் இப்போது தமிழீழம் என்பது ஒரு தனிநாடு! யாழ்ப்பாணம் அதன் தலைப்பட்டினம். அங்குள்ள மக்கள் இப்போது முதலாம் தரமானவர்கள்! வந்து போனவர் அயல்நாட்டு ஜனாதிபதி!

இறைவா எங்களின் உயிர்களின் இருப்பை இந்தக் கனவு நனவாகும் வரைக்குமாவது........!



"புரட்சித்தலைவி ஜெயலலிதா ஈழத்தமிழர்கள் வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்டதால் முழு ஈழ அகதிகளையும் இலங்கைக்கு அனுப்பச் சொல்லிப்போட்டா"

"அது பிழைதானே! ஒருசில தமிழர் இப்பிடிச் செய்யிறதாலை முழு அகதிகளிலையும் பழியைப் போடுறது நியாயமில்லை. இந்தச் சின்ன விசயம் விளங்காமல் எப்பிடி ஆட்சித் தலைவியா இருக்கிறா எண்டதுதான் விளங்கேல்லை"

"அப்பிடியெண்டா ஒருசில முஸ்லிம் ஆக்கள் செய்த 'பிழை'க்காக முழு முஸ்லிம்களையும் துரத்தினது பிழை எண்டு எங்களுக்கு ஏன் விளங்கேல்லை?"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கண்டனம்

ஐரோப்பாவின் முதற் தமிழ் அரசியற் படுகொலை மே முதற் திகதி பாரிஸ் நகரில் நிகழ்ந்திருக்கிறது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவர், பிரான்ஸின் முதற் தமிழ்ச் சஞ்சிகையின் ஆரம்பத்திற்குக் காரணமாக இருந்தவர், சிங்கள அரசாற் பாலத்துக்குக் குண்டுவைத்தவர் என்ற குற்றச்சாட்டிற் கைதாகி நான்காம் மாடியிற் சிறை வைக்கப் பட்டவர், நான்காம் மாடி அரச வதைமுகாமில் இருந்து குதித்துத் தப்பித் தலைமறைவு வாழ்வின்பின் பாரிஸில் அரசியற் தஞ்சம் கோரி வாழ்ந்தவர், தமிழ் நூல்கள் பலவற்றைப் பதிப்பித்து வெளியிட்டு 'ஆசியா' வெளியீட்டு நிறுவனத்தை நடத்தியவர், இவ்வருட முடிவிற்குள் ஆறு தமிழ் நூல்களை வெளியிட்டுவிட எண்ணம் கொண்டிருந்தவர் - சபாலிங்கம், தனது வீட்டில் மனைவி மகன் முன்னிலையில் இரு தமிழ்த் துப்பாக்கி இளைஞர்களால் சுடப்பட்டுக் கொலையுண்டார்.

இன்றுவரை சபாலிங்கத்தின் கொலைக்காக எவரும் உரிமை கோரவில்லை. அவரது பணிகள்மீது வெறுப்பும், அவரது எதிர்காலப் பணிகள்மீது பயமும் கொண்டிருந்தவர்களாலேயே இந்தக் கொலை நிகழ்த்தப் பட்டிருக்கும் என உறுதியாக நம்ப இடமுண்டு. கொலைகளைச் செய்தியாக்கிக் காசுபண்ணும் சிலர்கூட இந்தப் படுகொலையைப் பற்றி ஏதும் பேசாதிருப்பதும், பல இடங்களில் சபாலிங்கம் பற்றிய தவறான வதந்திகளைத் திட்டமிட்டுச் சிலர் பரப்புவதும் கொலைக்கு யார் காரணம் என்பதைச் சந்தேகத்திற்கு இடமின்றி நம்பவைக்கின்றன.

தமது கருத்துகளைக் கொண்டிராத அனைவரும் கொலை செய்யப்பட வேண்டியவர்களே என்ற மலினமான கொலைக் கோட்பாட்டுக்கு இன்னொருவர் பலியாகிவிட்டார். தமிழ் அரசியற் படுகொலை ஐரோப்பாவிலும் விழுதுவிடுகிறது. அபாயங்கள் பற்றி உணர்ந்துள்ள அனைவரும் தமது எச்சரிக்கைகளை வெளிப்படுத்தல் அவசியம். மௌனம், கொலைக்கான அங்கீகாரமாகவே கருதப்படக்கூடிய அபாயம் உள்ளது. சுவடுகள் இந்தப் படுகொலையைக் கண்டிப்பதுடன், தமிழ் மக்கள் வன்முறையாளர்கள் என்ற அபிப்பிராயத்தைத் தஞ்சம் புகுந்த நாடுகளில் உருவாக்கக்கூடிய இந்தப் படுகொலையை அனைத்துத் தமிழர்களும் ஒருங்கிணைந்து கண்டிக்க வேண்டும் எனவும் வேண்டுகிறது.

யாழ்ப்பாணத்தில் பதின்முன்று வருடங்கள் முன்பு சிங்களக் காடையர்களால் தமிழர்களது அரிய பல நூல்களைக் கொண்ட நூலகம் எரிக்கப்பட்டது. இவ்வருடம் மே மாதம் 23ம் திகதி, கனடாவில் இயங்கிவந்த, அரிய பல நூல்களையும் ஆவணங்களையும் கொண்டிருந்த தேடகம் நூலகம் தமிழர்களால் எரியூட்டப்பட்டது. சிங்கள அரச காடைத்தனத்திற்குச் சற்றும்

www.tamilarangam.net

சளையாத விதத்தில் அறிவியற் செல்வங்களான நூல்கள் எரியூட்டப்பட்டுள்ளன.

சிங்கள அரசு நிகழ்த்திய நூலக எரிப்பு இன்றும் தமிழ் மக்கள் மத்தியில், இன ஒடுக்குமுறையின் குறியீடாகக் கொள்ளப் படுகிறது. மீண்டும் தேடமுடியாத செல்வங்களான நூல்களை எரியூட்டுவது மனித நாகரிகத்திற்கு அப்பாற்பட்ட காடைத்தனம். இந்தச் செயலைச் சிங்கள அரசபடைகள் செய்தபோது பொங்கியெழுந்த நாம், எமது தமிழ் 'வீரர்கள்' செய்தபோது என்ன செய்யப் போகிறோம்?

தமிழ் மக்களாகிய எமது நாகரிக உணர்வுகளை மீள்மதிப்பீடு செய்யவேண்டிய தேவையை இந்தச் சம்பவம் உணர்த்துகிறது. தேடகம் நூலக எரிப்பை அனைவரும் பகிரங்கமாகக் கண்டிக்க வேண்டும். இவ்வாறான நிகழ்வு இனிமேலும் நிகழாதிருக்க அனைவரும் தம்மாலியன்ற வழிகளில் முயலவேண்டும். தமிழர்கள் வன்முறையாளர்கள் என்ற அபிப்பிராயம் சர்வதேச ரீதியில் ஏற்பட இவ்வாறான, எம்மவரது வன்செயல்கள் காரணம் என்பதைக் கவனத்தில் எடுத்து, இவ்வாறான செயல்களை நிறுத்த அனைவரும் முயலவேண்டும்.

● சுவடுகள்

## மண்ணில் வாழ்ந்தவர்



தமிழீழ மக்களது விடுதலைப் போராட்டம் உக்கிரமடைந்த காலங்களில் ஏற்பட்ட பல இழப்புகளில் ஒன்று, துறைசார் கல்வியியலாளர்களது இடப்பெயர்வால் ஏற்பட்டது ஆகும். ஏராளமான அறிஞர்கள், சமுகத்திற்குப் பயன்தரக்கூடிய திறமைசாலிகள் பல்வேறு காரணங்களால் நாட்டைவிட்டுப் புலம்பெயர்ந்த போதும், தமது மக்களுக்காகச் சேவை புரிவதில் உறுதியாக இருந்ததால் நாட்டைவிட்டு வெளியேறாது பணிபுரிந்தவர்கள் மிகச் சிலரே. இவர்களது சேவை மனப்பாங்கு பெரிதும் போற்றப்பட வேண்டியது. இவ்வாறு மக்களோடு மண்ணில் வாழ்ந்த யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் துரைராஜா அவர்கள் அண்மையில் மரணமானார். இவரது இழப்பு, யாழ் மக்களுக்குப் பேரிழப்பாகும். அவரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்திற்கும், மக்களுக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

– சுவடுகள் –

www.tamilarangam.net



● வாசகன் ●

என்ன? நூறு நோர்வேஜியக் குடிமக்களின் கழுத்துக்குக் கத்தி வந்துள்ளது. பாவம், அவர்கள் செய்ததெல்லாம் நிறவாதத்திற்கு எதிராகக் குரல் கொடுத்து வருவதுதான்.

நவநாஸிகள் அமைப்பு ஒன்று, நோர்வேயில் நிறவாதத்திற்கு எதிராகச் செயற்படுவோரின் பட்டியல் ஒன்றைத் தயாரித்துள்ளது. இந்தப் பட்டியலில் அரசியல்வாதிகள், மாநகர முதல்வர்கள், அரச மற்றும் அரசியற் தஞ்சம் கோரியோருக்கு ஆதரவான ஸ்தாபனங்களில் பணிபுரிவோர் அடங்குவர்.

இப்பட்டியலில் முக்கியமான சிலராக நோர்வே தேசிய தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பாளர் பீற்றர் நோம் (Peter noam), மாநிலசபை அங்கத்தவர் ஷெல் போர்யன் (Kjell Borje), இடதுசாரித் தேர்தற் கூட்டான அர்.வே.யின் (RV) எர்லிங் ஃபோல்க்வார்ட் (Erling Folkvard), டாக்பிளாத பத்திரிகையின் செய்தியாளர் சிஸ்ஸல் (Sissel Benneche Oswald, பெண்) அகதிகளுக்கான நோர்வேஜிய அமைப்பின் தலைவி அன்னத்த தொம்மஸன் ஆகியோரைக் கூறலாம். இவர்கள் தேசவிரோதிகள் என நாஸிகள் வகைப்படுத்தியுள்ளனர்.

இந்தப் பட்டியலில் உள்ளோரது வதிவிடம், தொழில், அடையாள இலக்கம், தொலைபேசி இலக்கம், அவர்களது குடும்பம் சென்றுவரும் இடங்கள் போன்ற தகவல்கள் திரட்டப் பட்டுள்ளன.

இதில் முப்பதுபேர் அதிமுக்கியமானவர்களாக 'வெறுக்கத் தக்கவர்களாக'க் கருதப் படுகின்றனர். இந்தப் பட்டியலில் உள்ளோர் இருவகையாகப் பிரிக்கப் பட்டுள்ளனர்.



***ANNETTE THOMMESSEN*** *står*



***SISSEL BENNECHE OSVOLD***



**KJELL BORGEN** er blant dem na-

www.tamilarangam.net



**FINN SJUE** understreker at det ik-



**PETTER NOME** er forbannet og



**ERLING FOLKVORD** lar seg ikke

இதில் முக்கியமாக செய்தியாளரான சிஸ்ஸலிற்கு அவதூறுக் கடிதங்களும், நாகரீகமற்ற முறையிலான தொலைபேசி மிரட்டல்களும் வந்தன. கடந்த மாதம் இவருக்குப் பாவித்த மலம்துடைக்கும் கடுதாசி அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

"நான் இதுபற்றி அதிர்ச்சி அடையவில்லை. நான் எனதும் எனது பத்திரிகையில் வெளியாகும் வெளிநாட்டவர் மற்றும் வெளிநாட்டவர் தொடர்பான அரசியலையும் ஏற்றுக் கொண்டவள்" எனக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இரண்டாவது பட்டியலில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியவர் பற்றியது. இதன்படி நிறவாதிகளை நடவடிக்கையில் இறங்கும்படி கோருவதுடன், தேவையேற்படின் வன்முறையை இவர்கள்மீது பிரயோகிக்கும்படி வேண்டுகிறது. இந்தப் பட்டியலில் முக்கியமாக மாநிலசபையாளர் ஷெல் பொர்யன் மற்றும் புதிதாகப் பாராளுமன்றத்திற்குத் தெரிவான எர்லிங் ஃபோல்க்வார்ட் இடம்பெறுகின்றனர்.

இந்தப் பட்டியல் பற்றி நிறவாத எதிர்ப்பாளர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். பரவலாக அறியப்பட்ட இனவாத அமைப்பான 'வெளிநாட்டவர்க்கு எதிரான நோர்வேஜியர்கள்' (NMI) அமைப்பின் தலைவர் ஆர்ண மிர்டால் கருத்துத் தெரிவிக்கையில் தான் இவ்வாறான 'வெறுப்பாளர் பட்டியலை' வரவேற்பதாகவும், ஜேர்மனி, டென்மார்க் நவநாஸிகளின் இவ்வாறான பட்டியலைப் போல நோர்வேயில் உருவாக்கத் தாம் முயன்று வருவதாகவும், தான் கொலை செய்வதை ஆதரிக்கவில்லை எனவும் கூறினார்.

நவநாஸிகள் நோர்வேயில் வாழும் வெளிநாட்டவர் பற்றிய பட்டியலைத் தயாரித்து வருவதாக அறியப்படுகிறது. அண்மையில் ஸ்தவாங்கர் நகரில் உள்ள வெளிநாட்டவர் பற்றிய பட்டியல் அங்கு ஒட்டப்பட்டிருந்தது. வெளிநாட்டவர்களது பெயர், முகவரிகள் குறிக்கப்பட்டிருந்த இந்தப் பட்டியலை 'பிர்க்கபெய்னர்' (Birkebeiner) குழு தயாரித்திருக்கலாம் என அறியப் படுகிறது.

www.tamilarangam.net

# ஒஸ்லோ தமிழர்களுக்கு

# அறைகூவல்




அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூட இரண்டாவது ஆண்டுவிழா, அரங்கம் நிறைந்த கலைவிழாவாக நடந்தேறியது. இத் துருவ தேசத்தில் வேரூன்றத் தொடங்கியுள்ள எமது சிறார்களின் சிறப்புகளை, ஒவ்வொரு திரைவிலகலிலும் காணக்கூடியதாய் இருந்தது. விழாவில் வளர்ந்தவர்களை விட சிறுவர் சிறுமியரே அதிகம் பேசினார்கள் என்று சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட திரு தாசீசியஸ் குறிப்பிட்டார். உண்மைதான், தடங்கலற்ற தமிழ் உச்சரிப்பு, கருத்துத் திணிப்பை மறைத்து நின்றது. வழமையான நிகழச்சிகளை, சிறுவர்கள் மூலம் வளமான நிகழ்ச்சியாகத் தயாரித்திருந்தார்கள்.

இவற்றில் சிறப்பம்சமாக அமைந்திருந்தது 'மீன்பாடும் பண்பாடு' எனும் நாட்டிய நிகழ்வாகும். 'பாரம்பரிய நடனங்கள்' எனும் அறிவுப்புடன் ஆரம்பமாகியது. மட்டுநகர் 'பாடும் மீன்' பாடுபொருளாக கொண்டு, எமது மண்ணின் பாரம்பரிய நடனங்கள், கும்மியில் தொடங்கி கூத்துவரை



www.tamilarangam.net

ஆடப்பட்டது. நடனமாடிய பத்துக்கு மேற்பட்ட சிறுமிகளின் முழுமையான பயிற்சி, இலகுவாய் வெளிப்படுத்தும் திறமைகள், ஆவலுடன் கலந்த அபிநயங்கள், நேரில் தரிசிக்கக் கூடியதாய் முகபாவங்கள், மேடையை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டமை, அத்தனையும் பாராட்டுக்குரியன. நடன ஆசிரியரின் திறமைக்கு இம்மேடை களம் அமைத்துக் கொடுத்திருந்தது எனலாம். இத்தனை சிறுமிகளையும் இயக்குவது என்பது இலகுவான விடயம் அல்ல. ஆனால் இயங்கவைத்து வெற்றி பெற்றுள்ளார்கள். மேடையில் ஆடப்பட்ட அத்தனை பாரம்பரிய நடனங்கள் மூலம் ஓர் அழுத்தமான செய்தியை சொல்லக்கூடிய சந்தர்ப்பம் இருந்தது. அதனைப் பயன்படுத்திக் கொள்ளவில்லையே என்ற ஏக்கம் நிகழ்ச்சி முடிவில் சிறிதாய் ஏற்படத்தான் செய்தது.

நிகழ்ச்சியில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட திரு.தாசீசியஸ் அவர்கள் சில வேண்டுகோள்களைப் பார்வையாளர்கள் முன்னும், அன்னை பூபதி கலைக்கூட நிர்வாகத்தினர் முன்னும் வைத்தார். அவை பரிசீலனை செய்யப்பட வேண்டியவையாகும்.

வேண்டுகோள் ஒன்று:

புகலிட நாடுகளில் தமிழ் சிறார்களுக்காக இயங்கிவரும் பாடசாலைகளுக்காக ஒரு பொதுப்பாடத்திட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்றும், இங்குள்ள பாடசாலை, மற்ற நாடுகளிலுள்ள பாடசாலைகளுடன் தொடர்புகளை ஏற்படுத்த வேண்டும், சகல பாடசாலைகளையும் இணைக்கும் ஓர் இணைவுமையம் தோற்றுவிக்கப்பட வேண்டும் என்றும் வேண்டிக்கொண்டார்.

ஒவ்வொரு நாடுகளிலும் சிதறி, சிதறி இருக்கும் எமக்கு, இப்படியான ஒரு பொது அமைப்பின் அவசியத்தை அவரின் வேண்டுகோள் கோடிட்டுக்காட்டியது.

வேண்டுகோள் இரண்டு:

அகதித் தமிழரைத் திருப்பி அனுப்புவதில் முன்னிற்கும் தமிழ்நாட்டில் இருந்து, கலைஞர்களையும், பேச்சாளர்களையும் இறக்குமதி செய்து, பாதபூஜை புரிந்து, பணமும் கொடுத்து, அகதிகளைச் சுரண்டிச் செல்ல அனுமதிக்கின்றோம். ஆனால் அவர்கள் ஈழத்தமிழரின் பிரச்சனைகள் பற்றி எழுத, பேச முடியாதவர்களாய் உள்ளபோது இவர்களுக்காக ஏன் ஆலாத்தி எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். எங்களின் தேவையை உணர்ந்து அதுபற்றி கருத்து வெளியிடக்கூடியவர்களையும், எங்களுக்காகப் பாடக்கூடிய கலைஞர்களை அழைக்கும்படியும், இவர்களிலும் மேலாக எங்கள் மண்ணில் பூத்த எங்கள் சமூக வழிகாட்டிகளை, எங்கள் மக்களுக்காக உழைப்பவர்களை, கலைஞர்களை, கவிஞர்களை, எழுத்தாளர்களை அழையுங்கள் என விடுத்த வேண்டுகோள்



www.tamilarangam.net

மனதில் தைத்தது.


வேண்டுகோள் மூன்று;

அகதிப் புகலிடப் பொந்துகளில் வாழும், எழுத்தாளர்கள், கவிஞர்கள், சமூகவழிகாட்டிகள், எம்மிடையே வெளிவரும் பத்திரிகைகள், சஞ்சிகைகள், இவற்றின் ஆசிரியர்கள் இவர்கள் எல்லோரும் தங்கள் ஆக்கங்களை எங்களின் மண்ணின் மேம்பாட்டுக்காய் கொடை புரிய வேண்டும் என்றும் வேண்டிக்கொண்டார்.

திரு.தாசீசியஸ் அவர்களின் பற்றுதல் மிக்க வேண்டுகோள்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

அன்னை பூபதி கலைக்கூடத்தின் நிகழ்ச்சிகளை முழுமையாக நோக்கினால், திரு.தாசீசியஸ் சிந்தனைக்குச் சில விருந்துகளையும், சிறார்கள் கலைவிருந்துகளையும் வழங்கினார்கள் எனலாம்.

**மதி**



www.tamilarangam.net

# புதிய நூல்

Ethnic Conflict and Human Rights in Sri Lanka
An Annotated Bibliography
(Volume 2: 1989 - 1992)
Hans Zell publishers, ISBN 1-873836-80-5

ஈழத்தில் இனப்பிரச்சனை, மனித உரிமைகள் தொடர்பாக உலகம் முழுவதும் நூற்றுக்கு மேற்பட்ட ஆய்வாளர்கள் கட்டுரைகளாக, நூல்களாக, கருத்தரங்குகளில் உரைகளாக தமது கருத்துகளை முன்வைத்துள்ளனர். இவர்களோடு ஈழத்தில் அரசியலை நடத்திக் கொண்டிருக்கும் அரசியல்வாதிகளும், தமிழ் மக்களைப் பொறுத்தவரை தமிழீழ விடுதலைப் புலிகளும் மற்ற அரசியல் அமைப்புகளும் தங்கள் கருத்துகளையும் கொள்கைகளையும் பல வடிவங்களில் வெளிப்படுத்தியுள்ளனர். நமது இனப்பிரச்சனை லட்சத்திற்கு மேற்பட்ட உயிர்களை அழித்தும், பல லட்சக் கணக்கானோரை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் புலம்பெயர வைத்தும் பலகோடி ரூபாய்கள் பெறுமதியான சொத்துகளை அழித்தும் உள்ளதென்பதை நாம் அறிவோம். இவை அனைத்தும் தொடர்பான ஆவணங்களைப் பல அமைப்புகள் தங்களாலானவரை சேகரித்து நமது நாட்டிலும், பிற நாடுகளிலும் வைத்துள்ளனர். ஆனால் எந்தக் கட்டுரை, எந்த நூல் யாரிடம் அல்லது எங்கு இருக்கும் என்பதை அறிவது சுலபமான ஒன்றல்ல. Sri Lanka Database என்ற வடிவத்தில் 1983ம் ஆண்டு ஒஸ்லோவில் சமாதான ஆய்வு நிலையத்தினால் (Peace Research institute, Oslo/ PRIO) ஆரம்பிக்கப்பட்ட முயற்சியானது ஒருசில காலம் (1989-1992) நோர்வே மனித உரிமைகள் நிலையத்தில் (Norwagian institute of Human Rights) இயங்கி இன்று லண்டனில் அமைந்துள்ள இன்ரநாஷனல் அலேட்டில் (International Alert) செயற்பட்டு வருகிறது. இம்முயற்சிகளின் பின்னணியில் பலர் தமது பங்களிப்பைச் செய்துள்ளனர். இதுவரையில் நமது இனப்பிரச்சனை தொடர்பாக, 1980ம் ஆண்டிலிருந்து 1992 வரையிலான 10,000க்கும் அதிகமான ஆய்வுக் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. செய்திக் குறிப்புகள் சம்பந்தமான கட்டுரைகள் இவற்றில் அடங்கா. உலகம் முழுவதும் வெளிவரும் கட்டுரைகளை, நூல்களை ஒன்றுசேர்ப்பது இலகுவான ஒன்றல்ல. Sri Lanka Databaseஇன் விளைவாக முதலாவது புத்தகம், 1989ம் ஆண்டு, Ethnic Conflict and Human Rights, An Annotated Bibliography - by Kumar Rupasinghe & Berth Verstappen என வெளியிடப்பட்டது. இத்தொகுப்பு 3200 ஆவணங்களின் முழுவிவரங்களையும், அதன் சாராம்சத்தையும் உள்ளடக்கியிருந்தது. ஆவணங்களை 15 பிரிவுகளாகப் பிரித்து, எல்லா அத்தியாயங்களும் காலக்கிரமத்தில் ஒழுங்கு செய்யப்பட்டு வெளியிடப்பட்டது. சென்ற வருட இறுதியில் 1989 முதல் 1992 வரை வெளியான 3000க்கு மேலான ஆவணங்களில் இருந்து 1128ஐத் தேர்ந்து, அவற்றின் முழு விவரங்களுடன் அவற்றின் சாராம்சத்தையும் குமார் ரூபசிங்ஹ, போர்த் வெர்ஸ்தப்பன், அன்ரன் பிலிப் ஆகியோர் இணைந்து தொகுத்துள்ளனர். 300 பக்கங்களை உள்ளடக்கிய இந்நூல் ஏற்கனவே வெளியான தலைப்புகளை வைத்து ஒழுங்குசெய்யப் பட்டுள்ளது. இம்முயற்சி தொடரவேண்டும் என்பதுடன், மேலும் பலர் இவ்வாறான பணியில் ஈடுபட வேண்டும் எனவும் எதிர்பார்க்கப் படுகிறது.

மணிமாறன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சக்தி சாகிறாள்!

திருச்செல்வம் திலீபன்

இந்த நிகழ்ச்சி பற்றி, பேனா பிடிக்கும் கரங்கள் எழுதாவிடில் எழுத்தாளரது கரங்கள் உடலில் இருப்பதில் அர்த்தமே கிடையாது. ஆம் எழுத்துகள் செத்துவிடும்.

இந்தக் கலியுகத்தில் கொலைகளற்ற நாடே இல்லை. அதுவும் பிறந்த குழந்தைகளைக் கழுத்து நெரித்துக் கொல்லும் மனிதர்களை அன்று கண்டேன். இந்த நிகழ்ச்சி இந்தியாவில் எடுக்கப் பட்டிருந்தது. அந்தக் கொலைகாரப் பெற்றோர் தமிழ் கதைத்தபொழுது, எனது ஆடை இடுப்பைவிட்டு விலகியும், என் கரங்கள் வாழாவிருந்தது போன்ற நிலையானது.



பெண் குழந்தை பிறந்தவுடன் தாயே அல்லது தந்தையோ அப்பிள்ளையின் கழுத்தை நெரித்துக் கொன்றுவிடுகிறார்கள். கேட்டால் சொல்கிறார்கள், ஒருநாளுடன் அத்துன்பம் முடிந்துவிடுவதாக. ஆண் பிள்ளை பெறும்வரை பிள்ளைகளைப் பெற்றுப், பெண் பிள்ளையானால் கொல்கிறார்கள். பெண்ணில்லாது உலகம் வெறும் ஆண்களுடன் இயங்க இயலுமா? பெண்ணினமே அழிந்துபோனால் ஆணைப் பெறத் தாயேது?

பெண்குழந்தையைப் பெற்றுக் கொன்றபின் அல்லது கொல்லக் கொடுத்தபின் ஒருநாளுடன் துயர் முடிந்துவிடும் என்று கூறும் காருண்ய மாதாவே!! உன்னையும் ஒரு பெண்தான் பெற்றாள். அன்று உனது அம்மா இதைச் செய்திருந்தால்....? பத்துமாதம் வரை இப்பெண் சிசு அம்மா என்னை ஒருதரம் தொட்டுப்பார் என்று உன் வயிற்றில் உதைத்தபோது ஆண் என்று எத்தனை தடவை நீ வயிற்றைத் தடவிச் சிரித்திருப்பாய். குழந்தைகள் இல்லாது

*இவ்வருடம் பெப்ரவரி 20ம் திகதி, மாலை சுவீடன் தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்ட ஒரு விவாண நிகழ்ச்சி பற்றிய குறிப்பு இது.*

www.tamilarangam.net

அழும் பெற்றோர்களின் அழுகுரல் கேட்டிருக்கிறாயா? கூன், குருடு, செவிடாகப் பிறந்த பிள்ளைகளைப் பார்த்திருக்கிறாயா? உனக்கு ஒரு விடயம் தெரியுமா தாயே? ஐரோப்பிய நாடுகளில் வளிமண்டலம் தொழிற்சாலைகளால் அசுத்தமாவதால் பிள்ளைபெறும் விகிதம் குறைவதாக, பிறக்கும் குழந்தைகள் குறைகளுடன் பிறப்பதாக விஞ்ஞானிகள் கவலைப்படுகிறார்கள். ஆனால் நீ முழுமையாய்ப் பெற்ற முத்தை இரவோடு இரவாகப் புதைத்துவிடுகிறாய்.

கருத்தடை முறைகளைப் பயன்படுத்தலாமே என்று நீங்கள்கேட்பது புரிகிறது, அவர்களுக்கு ஆண்பிள்ளை வேண்டுமாம். பிறக்குமுன் பிள்ளையை அறிந்து அழித்திடலாமே என்று கேட்கிறீர்களா? அதற்கான வசதிகள் தமிழ்நாட்டுக் கிராமங்களில் குறைவு. அதுவும் இந்தியாவின் வேறு பகுதிகளில் நிகழ்கிறது. அல்ட்றா ஒலி அலைகளை (Ultra sound) வயிற்றினுள் அனுப்புகையில் அவை திரும்பிவரும் எதிரொலியைப் படமாக மாற்றும் கருவியின் மூலம், கருவில் உள்ளது ஆணா பெண்ணா என அறியலாம். பெண் எனில் வயிற்றிலேயே கொன்றுவிடுகிறார்கள். ஐரோப்பிய நாடுகளில் குழந்தை ஆரோக்கியமாக இருப்பதை அறியவே இது பெரும்பாலும் பாவிக்கப்படுகிறது.

தெய்வத்துக்கு அடுத்ததாக மனிதன் நம்புவது வைத்தியரை. வைத்தியர் எம்மைக் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கையில் நாம் அவரிடம் போகிறோம். ஆனால் இந்த நிகழ்ச்சியில் காட்டப்பட்ட ஒரு வைத்தியர், இந்த அல்ட்றா ஒலியலைக் கருவியைக் கொலைசெய்யத் தூண்டும் கருவியாகப் பயன்படுத்துகிறார். அவர் ஒரு நாளுக்கு உழைக்கும் பணம் ஏராளம். படித்தவர்களே இதற்குத் தூண்டுதலாக இருப்பின், பாவம் வறிய மக்கள் என்ன செய்வார்கள்?

ஒருவன் மனிதனாக வாழ நல்ல மனச்சாட்சியைத் தவிரப் படிப்புத் தேவை இல்லை என்று புரிகிறது. வயிற்றினுள் பிள்ளைகளைக் கொல்வது தாய் மட்டுமல்ல, வைத்தியர்களே!!! நீங்களும்தான் கொல்கிறீர்கள். இத்தனை வருடம் பணம் செலவிட்டுப் படித்ததும், உங்களது தாய் உமக்கு அறுசுவை உணவிட்டதும், வீடு திரும்பும்வரை கணவன் உணவு உண்டபின் உண்பதற்காக உங்கள் மனைவி பசியுடன் காத்திருந்ததும், நீங்கள் செய்யும் இப்பெண் கொலைகளுக்காகவா? தாய், தாரம், சகோதரிகளுக்குச் செய்யும் நன்றிக்கடன் இதுதானா?

கொலை செய்யும் முறைகளைக் கேளுங்கள். கழுத்து நெரித்துக் கொல்லல், நெல்லைத் தொண்டையில் இட்டுக் குழந்தை மூச்சுத் திணறச் செய்தல், விஷம் கொடுத்துக் கொல்லல், குப்பையில் அநாதரவாகப் போட்டுவிடல். அடைமழையில் குழந்தையை கத்தக் கத்த வெளியில் புதற்றினுள் வைத்துவிட்டுப் போனாள் ஒரு பாவித்தாய். உனக்கு "அம்மா நான் என்ன குற்றம் செய்தேன்?" என்று உன் பாலகன் கத்தும் குரல் கேட்கவில்லையா?

ஏன் கொல்கிறீர்கள் என்று கேட்டதற்கு, பெண்பிள்ளை என்றால் குடும்பத்திற்குப் பாரம், கஷ்டப்பட்டுக் காப்பாற்ற வேண்டும், சாகும்வரை பொறுப்பு, சீதனம் கொடுக்க வேண்டும் என்கிறார்கள். நாம் ஒரு நேரமே சாப்பிடக் கஷ்டப்படுகிறோம், இதற்குள் பிள்ளையை எப்படிக் காப்பாற்றுவது, இப்படிப் பல காரணங்கள், சாட்டுகள்.

எமது நாடுகளைப் பொறுத்தவரை ஒரு பெண் குழந்தை பிறந்தால் சாகும்வரை அது பாரம்தான், அப்பெண்பிள்ளை பூப்பெய்தியதும் தன் உணர்ச்சிகளைக் கொன்று அடங்கித் தாய் தந்தையருக்குப் பயந்து நடக்கவேண்டும். தான் விரும்பும் ஒருவனைக் கடைக்கண்ணால் பார்த்தால்

www.tamilarangam.net

போதும், அவள் நெறிதவறியவள் ஆகிவிடுவாள், கற்பிழந்தவள் ஆகிவிடுவாள். அவளுக்குக் கல்யாணமே நடக்காது. சீதனம் கொடுக்க வேண்டும், கொடுத்தபின்பும் வாழாவெட்டியாக எப்போது வந்து கதவைத் தட்டுவாள் என்று தெரியாது. கல்யாணம் கட்டிக் கொடுக்கும்வரை கண்படாமல் வேறு கைபடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இப்படி ஆயிரம் பிரச்சனைகள். நியாயமானதுதான்.

இந்தச் சீதணக் கலாசாரத்தை உருவாக்கியது யார்? நீங்கள்தான். உருவாக்கிய உங்களுக்கு அதை அழிக்கவும் உரிமையுண்டு. பெண் பிள்ளைகளைக் கொன்று விடுவதால் சீதணம் அழிந்துவிடுமா? அல்லது உங்கள் ஆண் பிள்ளைகளுக்கு வாங்காது விட்டுவிடுவீர்களா? பெண்குழந்தைகளைக் கொல்லும் பெற்றோரே கேளுங்கள். நீங்கள் உருவாக்கிய சீதணக் கலாசாரத்தை எதிர்க்க வக்கற்ற நீங்கள் வாயில்லா ஜீவன்களான பெண் சிசுக்களைக் கொல்கிறீர்கள். முடிந்தால் எதிர்த்துப் போராடுங்கள். இல்லையேல் தோல்வியை ஒப்புக்கொள்ளுங்கள். பெண் சிசுக்களைக் கொல்லாதீர்கள்.

ஒருவேளை உணவுக்கே கஷ்டப்படுகிறோம், அதனால்தான் பெண் சிசுக்களைக் கொல்கிறோம் என்கிறீர்களே. ஆணி சிசுவானால் அதற்கு எப்படி உணவு கொடுப்பீர்கள்? காற்றைக் குடித்து வளருமா ஆண்பிள்ளை? ஒருவேளை உணவுக்குக் கஷ்டப்படும் உனக்குக் குழந்தை ஒரு கேடா என்று எண்ணி அதை நீ சொல்கிறாய்.

பெண்பிள்ளையானால் கல்யாணம் கட்டிப் போய்விடுவாள். ஆண்பிள்ளை என்றால் தாய் தந்தையரைப் பார்க்குமாம். இது ஒரு புது வியாக்கியானமாக இருக்கிறது. எமது முன்னோர் 'ஆண் நிழலில் நின்றுபோ, பெண் நிழலில் இருந்துபோ' என்று கூறிய முதுமொழியை மறந்துவிட்டீர்களா?

## சோலைக்கிளியான ஆணிவேர் அறுந்த நான்

*சோலைக்கிளியின் நான்காவது கவிதைத் தொகுதியான 'ஆணிவேர் அறுந்த நான்' ஆசியா வெளியீடாக வந்துள்ளது. விலை 25 பிரெஞ்சு பிராங்குகள். தொடர்புகள்:* ASSEAY,/ 3, Alle Paul Leautaud,/ 95200 Sarcelles/ France.

## சரிநிகர்

புதிய முகவரியில் இருந்து இருவார இதழாக வெளிவருகிறது சரிநிகர். வருட சந்தா 30 (அமெரிக்க) டொலர்கள். தொடர்புகள்: 4, ஜெயரட்ண அவெனியூ,/ திம்பிரிகஸ்காய,/ கொழும்பு 5.

## மரபு

*இருமாத இதழ். தொடர்புகள்:* P.O.Box 232/ Wantirna South/ Victoria 3152/ Australia.

---

படித்தவர்கள் பட்டம் பெற்றவர்கள்கூட இந்த நிகழ்ச்சியில் பேட்டி காணப்பட்டார்கள். இந்தியா அளவுக்கதிகமான சனத்தொகை கொண்ட நாடு என்று கூறிப் பெண் சிசுக் கொலையை ஆதரித்துக் கதைத்தார்கள். நான் கேட்கிறேன், பெண் சிசுக்களைக் கொல்வதால் மாத்திரம் சனத்தொகை குறைந்துவிடுமா? கொலையை ஆதரிக்கும் கனவான்களே, அரசியல்வாதிகளே, கருத்தடை முறைகளைப் பாமர மக்களுக்கு விளக்குங்கள். போலி வெட்கங்களை விடுங்கள். ஒரு பெண்ணோ, ஆணோ கருத்தடை மாத்திரையோ அல்லது கருத்தடை சாதனம் ஒன்றையோ கடையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போய் வாங்கினால் கடையில் இருப்பவர் சிரிப்பார். காமம் என்பது இயற்கையில் இல்லாத ஒன்று என்பதுபோல். அதுமட்டுமன்றி மற்றவர்களுக்கும் சொல்லி அரட்டை வேறு. காமம் என்பது நாம் பிறக்கும்போது சேர்ந்து பிறப்பது. இதில் வெட்கப்பட ஒன்றுமில்லை.

இன்னொரு கோர நிகழ்ச்சி காட்டப்பட்டது. ஒரு பெண் சீதனம் கொண்டுவந்தது குறைவு என்பதால் கணவன் அவளை எண்ணெய் ஊற்றிக் கொழுத்தினான். அப்பெண் எரிகாயங்களுடன் வைத்தியசாலைக்குக் கொண்டுவரப் பட்டாள். அவள் துடித்துக் கொண்டிருந்தாள். வாய் நடுங்கிக் கொண்டிருந்தது. முகம் பொசுங்கியிருந்தது. இதே முகத்தில்தான் அவன் அன்பே என்று கொஞ்சியிருப்பான்.

ஒரு பெண்ணைக் கைப்பற்றும்போது கடைசிவரை அவளை வைத்துக் காப்பாற்றுவேன், இணைந்து வாழ்வேன் என்று வாக்குறுதி கொடுத்தே தாய்தந்தையரிடம் இருந்து ஆண் பெறுகிறாள். அவள் சீதனம் கொண்டுவரவேண்டும் என்று எதிர்பார்த்தாலோ, கொண்டுவந்த சீதனம் போதாது என்று எதிர்பார்த்தாலோ அதைவிடக் கோழைத்தனம் எதுவும் கிடையாது.

இன்னுமொரு நிகழ்வு. ஒரு கணவன் மனைவிக்கு அடித்தான் என்பதற்காக நகர்காவலர் (police) அவனை மக்கள் கூட்டத்தின்முன் அடித்தார். ஏனெனில் அவனுக்கு அடி எப்படி இருக்கும் என்று காட்டவும், மனைவிக்கு அடித்தால் பொலிஸ் அடிக்கும் என்று உணர வைக்கவுமாம். முட்டாள்தனமான விவாதம். வன்முறயால் அமைதியை நிலைநாட்ட முடியாது, பலாத்காரத்தால் பலாத்காரத்தை வெல்லவும் முடியாது. அறிவுக் குறைவால் ஆண் மனைவியை அடித்தான். பொலிசார் அவனுக்கு அடித்தால் அவனுக்கும் பொலிசுக்கும் என்ன வித்தியாசம்?

இந்தியா பெருமைப்பட உள்ள ஒன்றே ஒன்று இந்துமதம். அதிலும் பெண்ணை இடப்பாகம் கொண்டவன் ஆண்டவன். ஆண்டவனுக்கே சக்தியாக அமைந்தவள் பெண். இந்தப் பெண்ணான சக்தியின்றி ஓரணுவும் அசையாது. அந்தப் பெண் தெய்வங்களான சிசுக்கள் கொலை இந்துமதம் பரந்து வளர்ந்த இந்தியாவில் நடக்கலாமா?

பெண்ணை முதல் தெய்வமாக சிவனுக்கே சக்தியாக வணங்குவது இந்தியா வளர்த்த இந்துமதம். வேறு எந்த மதங்களிலும் பெண் தெய்வங்கள் கிடையாது. தேவதைகளாக ஓரிரு மதத்தவர் வணங்குவதுண்டு. பெண்ணைத் தெய்வமாகவும், குழந்தைத் தெய்வமாகவும் வணங்கும் ஒரேயொரு மதம் இந்து மதம். இந்த மதம் வளர்ந்த நாட்டில், அகிம்சாமூர்த்தி காந்தி பிறந்த மண்ணில் இக்கொலைகள் நடக்கலாமா?

இப்படியான கொலைகள் இந்தியாவில் மட்டும்தான் நடக்கிறது என நான் கூறவில்லை. சீனா, பாகிஸ்தான், தென்னமெரிக்கா, ஏன் உலகம் முழுவதும் நடக்கிறது. பணக்கார நாடுகளில் ஒன்றான நோர்வேயிலும் குழந்தைகளைக் குப்பைத் தொட்டியில் போட்ட கதைகள், குழந்தையைக் கொன்று குளிர்சாதனப் பெட்டியில் வைத்த கதைகள் பல உண்டு. இங்கு ஆண் பெண் என்று இல்லாமற் செய்யப்பட்டது. இருப்பினும் இது கொலையே. அதுவும் சிசுக்கொலையே.

இது எந்த நாட்டிலும் நடக்காத ஒன்றல்ல. ஆனால் இது இந்தியா போன்ற எமது நாடுகளில் இது நடக்கக்கூடாது. உயிரை மட்டுமல்ல, உலகத்தையே காத்து ரட்சிக்கும் சக்தி சாகக்கூடாது..... சக்தி சாகக்கூடாது...... சக்தியை ஆக்கவும் இயலாது அழிக்கவும் இயலாது என்று விஞ்ஞானம் கூறுகிறது. இதை எதிர்த்து நிரூபிக்கிறோம் என்று முயல்கிறது போலும் இந்த ஆண்களின் உலகம்.

சக்தி சாகாள்........ சக்தி சாகக்கூடாது..... சக்தி சாகக் கூடாது......

www.tamilarangam.net

# சுவடுகள்

ஈழப் போராட்டத்தின்மீது இலங்கை அரசின் வன்முறைக்கரங்கள் படியத் தொடங்கிய நாளில் இருந்தே, தமிழ் மக்கள் பெருமளவில் அகதிகளாக்கப்பட்டனர். வசதி படைத்தவர்கள் பலர் கனடா, அவுஸ்திரேலியா, ஐரோப்பிய நாடுகள் எனப் புலம்பெயர, வசதி குறைந்த பலர் இந்தியாவில் தஞ்சம் கோரினர்.

ஈழப் போராட்டத்தில் இந்தியாவின் தலையீடும், மேலாதிக்கமும் பற்றி நாம் நிறையவே அனுபவபூர்வமாகக் கண்டுள்ளோம். ஆரம்ப காலத்தில் இந்தியா அயல்நாடு என்றும், தமிழகம் ஒரு மேலதிக பிணைப்பாகவும் கருதி இவர்கள் எமக்கு உதவுவார்கள் என்றே ஈழமக்கள் அதிகம் எதிர்பார்த்தனர். ஆனால் இந்திய அரசு தனது நலனை மட்டுமே கருத்திற் கொண்டதும், தமிழக ஓட்டுக் கட்சித் தலைவர்களது சந்தர்ப்பவாத அரசியலும் எமக்குப் பல படிப்பனைகளைத் தந்துள்ளது.

அண்மையில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் அறிக்கை எல்லா ஈழத் தமிழர்களையும், தமிழக மக்களையும் கவலை கொள்ள வைத்துள்ளது. 'இந்தியாவில் உள்ள ஈழ அகதிகளே கொலை கொள்ளை சட்டச் சீர்குலைவுகளுக்குக் காரணம். ஆகவே இவர்களைத் திருப்பி அனுப்ப வேண்டும்' என்று மனித நேயத்திற்கு முரணான வகையில் அறிக்கை விடப்பட்டது. ஈழத்தில் இன்றைய அவலநிலையை இவர் அறியாதவர் அல்லர். இத்தகைய மோசமான நிலையில் இவர் இப்படிச் சொல்வதன் காரணம் என்ன?

ஈழத் தமிழர்கள் ஒருசிலர் ஒருசில சட்டவிரோதச் செயல்களில் ஈடுபட்டிருப்பின் அவர்களைத் தண்டித்தல் தவறல்ல. ஒருசிலரின் நடவடிக்கை காரணமாக முழுத் தமிழர் மீதும் பழியைப் போடுவது மிகவும் மோசமான நடவடிக்கை ஆகும். இது முழுத் தமிழினத்தையும் இழிவுபடுத்துவதும்கூட.

இவ்வாறான குறுகிய தீய நோக்கத்திற்குத் துணைபோகும் சோ போன்றவர்களும், அவர் சார்ந்த பத்திரிகைகளும் ஈழத்தமிழர்களுக்கு எதிரான கருத்தை உருவாக்குவதில் முன்நிற்கின்றன. ஈழத்தமிழரின் நியாயமான போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்காத இவர்கள், ஈழத்தமிழர் துயருக்கு அனுதாபம் கூறாத இவர்கள், ஈழம் பிரிந்தால் தமிழகம் பிரிந்துவிடும் என்று கூக்குரல் எழுப்புகிறார்கள். அண்மையில் வை.கோ. பிரிவின்போது ஆனந்த விகடன் தன் ஆசிரியத் தலையங்கத்தில் இந்த வாந்தி எடுத்திருந்தது. திமுக தலைவரும் இதற்குச் சளைத்தவரல்லர். தனது தலைமையையும், சுயநல அரசியலையும் காப்பாற்ற ஈழத்தமிழர்பாலும், போராளிகள் மீதும் அக்கறை கொண்டிருப்பதாக இவர் ஆடிய நாடகங்கள் மறக்கக்

www.tamilarangam.net

கூடியனவல்ல.

நாங்கள் சுயநல ஓட்டுக் கட்சி அரசியல்வாதிகளை விடுத்து, தமிழக மக்களிடம் வேண்டுவதெல்லாம் இதைத்தான்: ஈழத்தில் உள்ள உண்மை நிலையை அறிந்துகொள்ளுங்கள். மனிதநேயத்துடன் ஈழ அகதிகளை நடத்துங்கள். தமிழீழ மக்களது நியாயமான போராட்டத்திற்கு ஆதரவு தாருங்கள்.

தமிழகத்தில் ஈழ அகதிகள் போர்வையில் நடக்கும் வன்முறைகளை, சட்டவிரோதச் செயல்களை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இரண்டு வருடங்களின் முன்பு ஈழத்தமிழர்கள் தமிழகத்தில் இருந்து திருப்பி அனுப்பப்பட முற்பட்டபோது ஐரோப்பியத் தமிழர்கள் இது நமக்கில்லையே என்று அசண்டையாக இருந்தார்கள். நோர்வேயிலும் தமிழர்களது பொது அமைப்புகள்எதுவும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நடவடிக்கையில் ஈடுபடவில்லை. இதன் ஒரு பக்கவிளைவுதான் அண்மையில் நோர்வேயில் இருந்து ஈழத்தமிழர் அனுப்பப்பட முற்பட்டதும், சுவிஸ், நெதர்லாந்து போன்ற நாடுகள் இந்த நடவடிக்கைகளை முடுக்கி விட்டிருப்பதும்.

பிரச்சனைகளில் இருந்து நழுவிவிடாமல் எமது பிரச்சனைகளை நாம் ஒற்றுமையாகத் தீர்க்க முனைய வேண்டும். இங்குள்ள தமிழீழ மக்கள் குறைந்தபட்சம் இங்கு நிலவும் பிரச்சனைகளுக்காக மாத்திரமாவது தம்மிடையே ஒற்றுமையை ஏற்படுத்தி ஒன்றுபட்ட ஒரு பொது அமைப்பைக் கட்டி எழுப்புவது அவசியம். இனியாவது காலம் தாழ்த்தாமல் இதற்கான நடவடிக்கைகளில் அனைவரும் மனச்சுத்தியோடு ஈடுபடுவது அவசியம்.

● சுவடுகள்.

## ஒரு நிமிடம்

சுவடுகள் இந்த இதழ் மிகத் தாமதமாகவே வருகிறது. வழமை போலவே மன்னித்துவிடுங்கள் (வேறென்னதான் செய்வது). சுவடுகளில் ஓரளவாவது நம்பிக்கை கொண்ட வாசகர்களுக்கு இந்தக் காலதாமதம் மகிழ்ச்சியாக இராதுதான்.

இந்த இதழ் யூன் இறுதியில் வந்தாலும், சந்தாதாரரின் நலன் கருதி ஏப்ரல் இதழாகவே குறியிடப்படுகிறது.

மற்றும், உங்கள் சந்தாவை அனுப்புங்கள் என்று நினைவுபடுத்தவேண்டிய நிலையிற் பல வாசகர்கள் உள்ளனர். நினைவுபடுத்துகிறோம்.

சுவடுகள்


சுவடுகள்,
இதழ் 56,
சித்திரை 94.
(ஆனி94ல் வெளிவருகிறது)

Herslebs gt43, 0578 Oslo



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வெறும் மண்ணும் சும்மா வீசுகிற காற்றும்

எம்.எல்.எம்.அன்ஸார்

சுடு.
மாரிகாலத்து வானம் போலப் பொழி
குண்டுகளை.
வீதிகளில்
காட்டில் நகரங்களில்
க்றகளாகவும்
மண்ணைப் போலவும்
மனிதரின்
நொறுக்கப்பட்ட எலும்புகளும்
மண்டைத் துண்டுகளும்.

உனக்கென்ன கோதாலி?
காக்கை வலியா?
தேவைக்கில்லாத தாள்களைக் கிழிப்பது
மாதிரி
மனிதரைக் கிழித்து
குதறி எறிகிறாயே!

விடுதலை யுத்தம்.
கேட்டால் சொல்லுவதற்கு தயாராக நீ.
சூட்டுக் கோல்பட்ட ஆட்டுக் குட்டியாக
பதறுகிறது மனசு,
உனது தாக்குதல்களால்
கொல்லப்படுகின்ற
மனித உயிர்களின் கணக்குப் பார்த்து.
இரத்தத்தாலும்
கண்ணீரின் ஈரத்தாலும் துருப்பிடித்து
ஓட்டை உடைசலான தேசம்.
இதில் -
சவங்களை அடுக்கியா
புதிய தேசம் கட்டப் போகிறாய்?

உனக்கென்ன
கண்களில் வெறியும்
துப்பாக்கி கைகளிலும் இருக்கிறது.
உனது நோக்கமெல்லாம்...
பேராசையெல்லாம்...
வெறும் மண்ணும்
சும்மா வீசுகிற காற்றும்தானே!

ஆகையால்,
சுடுவாய்;
அம்மா, அப்பா, அண்ணன், தம்பி
தங்கை
தோழர்கள்
எல்லோர் மீதும்
குண்டுகளை வீசியே தீருவாய்.

300793

www.tamilarangam.net

# வன்முறைகள்

## வளரும் கோடைக்காலம்

— ராஜன்.



"உதவி.... உதவி.... என 'லி:ப்'டினுள் அகப்பட்டுக் கொண்டவர்களின் அலறல் எனக்குக் கேட்டது. மாடிப்படி எங்கும் புகை நிரம்பி இருந்ததால் அவர்களுக்கு உதவி செய்யமுடியாத நிலையில் இருந்தேன். இருபத்திமூன்று வருடங்களாக இங்கு வசிக்கும் நான், இந்தச் சம்பவத்தால் மிகவும் பாதிக்கப் பட்டுள்ளேன்"

- Kjerstin Lisødegaard (57)

"உடல் ஊனமுற்றிருக்கும் எனக்குச் சக்கர நாற்காலியே தஞ்சம். உதவியில்லாமல் என்னால் வெளியில் வரமுடியாது. இதனை நினைத்துப் பார்த்தால் பயங்கரமாக உள்ளது."

- Karen Lisødegaard (82)

"உயிருக்கு ஊசலாடிய அந்த நிமிடங்களை விவரிக்கவே முடியாது. புகையினால் என் மூச்சே நின்றுவிடும் போல் இருந்தது. உயிர் தப்பியது பெரும் காரியம்"

- Hàkon Lisødegaard (46)"

"இந்தச் சம்பவத்திற்குப் பிறகு இங்கு இருக்க விரும்பவில்லை, அமைதியான சூழலுக்கு இடம்பெயரலாம் என்று எண்ணுகிறேன்"

- Johnny (58)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



www.tamilarangam.net

"ஏழு நிலவறைகள் (Kjeller boder) முற்றாக நெருப்பினால் அழிந்துள்ளன. உயர்மாடிக் கட்டிடமும் புகையினால் சேதம் அடைந்துள்ளது"

– 42ம் இலக்க உயர்மாடியில் வசிப்பவர்கள்

இப்படி, ஒஸ்லோவின் ஸ்ரொவ்ணர் பகுதியில் வாழும் நோர்வேஜிய மக்கள் சிலர் சொல்லக் காரணம் என்ன?

"பழிக்குப் பழிவாங்கும் முயற்சியில் வீட்டுக்குத் தீவைத்தார்களா?" என 'அர்பைத பிளா(த)' பத்திரிகை ஏப்ரல் 19 முன்பக்கத் தலைப்புச் செய்தியில் இலங்கைத் தமிழர்களைப் பற்றிக் கேட்டது!

வானொலியோ மணிக்கொருதரம் தனது செய்தியில், தமிழ் இளைஞர்கள் குழுக்களாகக் கார்களில் சென்று 'ஒஸ்த்ற ஆக்கர்' வீதியில் சென்று சண்டையிட்டார்கள் என்றும் இதனால் போக்குவரத்துச் சீர்குலைந்தது என்றும் அறிவித்தது!

பத்திரிகைகள் பலவும் 'உள்ளூர்க் கிளர்ச்சிக்காரர்' என்று தமிழர் சிலருக்குச் சாயம் பூசின.

இத்தனைக்கும் ஏப்ரல் மாதம் 18ம் திகதி நடந்து முடித்த நாடகம் இதுதான் எனப் பத்திரிகைகள் எழுதித் தள்ளின. ஸ்ரொவ்ணர் பொலிஸ் நிலையத்தில் 26வயதுத் தமிழ் இளைஞன் தன்னைச் சில தமிழ் இளைஞர்கள் தனது காரில் இருந்து வெளியே இழுத்து அடித்தார்கள் எனப் புகார் கொடுத்தான். பொலிஸ் நிலையத்தில் இருந்து திரும்பி வரும்போது பல தமிழர்கள் அவரை வழிமறித்துத் தாக்கியுள்ளனர். அவர்களிடம் இருந்து தப்ப தனது நண்பர்கடன் காரில் ஏறி அந்த இளைஞன் தப்ப, வேறு கார்களில் அவர் துரத்தப் பட்டுள்ளார். தப்பிச் செல்லும் தமிழரை அடிபாட்டுக்குத் தயாராகச் சென்ற தமிழர்கள் துரத்திய காரோட்டம் 'ஒஸ்த்ற ஆக்கர் வெய்' என்ற நகரின் பிரதான வீதிகளில் ஒன்றில் தொடர்ந்தது. நடுவழியில் விண்டறூா எனும் இடத்தில் தப்பி ஓடியவரின் கார் வழி மறிக்கப்பட்டுத் தாக்கப் பட்டது. இரும்புக் கம்பிகள், பொல்லுகளால் தாக்குதல் நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது. துரத்தி வந்த இன்னொரு கார் அந்த இடத்தில் நின்ற இன்னொரு இளைஞனை மோதியது. இவற்றால் போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்தது. இச்சம்பவத்தில் இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டதுடன், பதினொரு பேர்வரை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டனர்.

இவை நடந்து முடிந்த சிறிது நேரத்தில் பாதிக்கப்பட்ட 26வயது இளைஞன் வசித்த கட்டிடத்தின் நிலவறையில் தீப்பற்றியது. கட்டிடம் முழுவதும் நச்சுப் புகையால் நிரம்பியது. பாவனைக்கு இருந்த லிப்ட்டும் செயலிழந்ததால் அதனுள் அகப்பட்டுக் கொண்ட இரு நோர்வேஜியர்கள் உயிருக்காகப் போராடினார்கள். மாடிப்படிகள் முழுவதும் புகை மண்டலமாய் நிரம்பியதால் மேல்மாடியில் இருந்தவர்கள் தப்பி வெளியில் வரவும் முடியவில்லை. லிப்ட்டினுள் இருந்தவர்களின் அபயக் குரல் கேட்டும் எவரும் உதவி செய்ய முடியாமல் இருந்த நிலையில் தீயணைப்புப் படையினர் அவர்களை வந்து மீட்டனர். தீ இயல்பாக ஏற்பட்டதா? மூட்டப்பட்டதா? அதற்கும் இந்த மோதற் சம்பவங்களுக்கும் தொடர்பு உள்ளதா எனப் பொலிசார் விசாரித்து வருகின்றனர்.

பொலிசாரது குற்றவியல் விசாரணைகள் ஒருபுறமிருக்க, நடந்து முடிந்த சம்பவத்தில் சம்பந்தப் பட்டவர்கள் தங்களைத் தாங்களே சுயவிசாரணை செய்து கொண்டார்களா? நடந்த சம்பவங்கள் சரியானவைதானா? உங்களது சமூகத்தில் எத்தனையோ பிரச்சனைகள் இருக்கலாம். அதற்காக எங்களையும், எங்கள் சூழலையும் ஏன் மாசுபடுத்துகிறீர்கள் என்றுதான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சம்பவங்களை அவதானித்த நோர்வேஜியர்கள் கேட்கிறார்கள். நோர்வேஜிய தொடர்பு ஸ்தாபனங்களுக்கும் இங்குள்ள தமிழர்களுக்கு, காரால் கலைபட்டு அடிபடும், தீவைக்கும் அளவுக்கு என்ன பிரச்சனை உள்ளது என்று ஆராய விரும்பவில்லை. சம்பவத்தால் தம்மக்களுக்கு என்ன பாதிப்பு ஏற்பட்டது என்பதையும் சூழலுக்கு ஏற்பட்ட அழிவையும்தான் முதன்மைப் படுத்தினார்கள். இதற்கெல்லாம் தீர்ப்பு வழங்குவது போல, 'வன்முறையில் தொடர்ந்து ஈடுபடுபவர்களை, அவர்கள் வன்முறைகளை நிறுத்தாத பட்சத்தில் நோர்வேயை விட்டு வெளியேற்ற வேண்டும்' எனத் தமிழ் நோர்வே மக்கள் இணைவுகூடப் பேச்சாளர் ஏப்ரல் 23, அர்பைதபிளா பத்திரிகையின் முன்பக்கத் தலைப்புச் செய்தியில் கூறியிருந்தார். இந்த நாட்டின் சட்டத்தை நாங்கள் எங்கள் கைகளில் எடுத்துக் கொண்டோமா? நாளை ஏதாவது ஒரு பிரச்சனைக்கு இங்குள்ள தமிழர்களை வெளியேற்ற அரசு நினைக்கும்போது, நாங்கள் அளித்த தீர்ப்பையே பத்திரிகைகள் முன்னுதாரணம் காட்டி எழுதக்கூடும். நோர்வேஜியச் சட்டங்களுக்கு உட்பட்டு, குற்றம் இழைப்போர் தண்டிக்கப்பட வேண்டும் என்பது வேறு.

எத்தனையோ வகையான வன்முறைகளுக்கு முகம்கொடுக்க முடியாமல் தாய்நாட்டை விட்டு வெளியேறினோம். தற்போது தஞ்சம் புகுந்த நாட்டிலும் அதேவகையிலான வன்முறைகளுக்கு மீள்வடிவம் கொடுக்கிறோம். கதிகால் பிரச்சனைகளுக்கும் கத்தி தூக்கிய பழக்கத்தை இங்குள்ள அமைதியான ஜனநாயகச் சூழலைப் பார்த்த பின்பாவது விட்டுவிட இன்னும் நாம் பழகவில்லை. வளர்ந்துவரும் எமது சிறார்களுக்குரிய







www.tamilarangam.net

அமைதியான, ஆரோக்கியமான சூழலை உருவாக்காமல், வன்முறைகள் நிறைந்த சூழலை உருவாக்குவதால் நோர்வேஜியர்களும் எமக்கருகில் குடியமரப் பயப்படுகிறார்கள். இதற்கு, பாதிக்கப்பட்ட நோர்வேஜியர்களின் கூற்றே சான்று. எங்களது அசுத்தங்களால் நோர்வேஜியர்களது சூழல் மாசடைகிறது என்ற அவர்களது அங்கலாய்ப்புக்கு நாம் என்ன பதில் சொல்லப் போகிறோம்? தமிழ் மக்கள் பற்றிய மோசமான அபிப்பிராயம் ஏற்படக் காரணமாக இருந்த பல நிகழ்ச்சிகளில் இந்த மோதலும் ஒன்று. இதனைத் தமிழ் மக்களது அமைப்புகள் எதுவும் உடன் கண்டிக்காது மௌனம் சாதித்தமை, உண்மையில் இந்த அமைப்புகள் தமிழரது நலன்களைப் பிரதிபலிக்கின்றனவா என்ற சந்தேகத்தைத் தவிர்க்க முடியாமல் உண்டாக்குகின்றது.

கோடைகாலம் என்றால் எங்கள் தோட்டங்களில் வன்முறைகள்தான் பூக்க வேண்டுமா?



## 17மே!

'சொத்தண்ட மாய்'' என்று நோர்வேஜிய மொழியில் குறிப்பிடப்படும் தினம் மே17தான். ஆனால், அது அன்று கொண்டாடப்படும் நோர்வேயின் தேசிய தினத்தையே குறிக்கும். நோர்வேயில், ஏனைய பல நாடுகளைப் போலன்றி, அடிப்படை அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்ட நாளையே தேசிய தினமாகக் கொண்டாடுகின்றனர். அனேகமான நாடுகளில் அந்நாடு அந்நிய ஆட்சியில் இருந்து விடுபட்ட நாளையே தேசிய தினமாகக் கொண்டாடுகின்றனர்.

நோர்வேயின் தேசிய தினம் குறிப்பிடத்தக்க சில சிறப்புகளைக் கொண்டிருக்கிறது.

1. இத்தினமானது அடிப்படை அரசயாப்பு உருவாக்கப்பட்டதை அடிப்படையாகக் கொண்டே கொண்டாடப்படுவதால் அனைத்துத் தரப்பு மக்களும் தமக்குச் சம்பந்தமான ஒரு நாளாக உளப்பூர்வமாகக் கொண்டாடுவதைக் காணமுடிகிறது.

2. சகல கிராமங்களிலும், சகல நகரங்களிலும் கொண்டாடப்படும் விழாவாக இது உள்ளது. சகல மக்களும் தேசியக் கொடிகளுடன், தேசிய உடைகளில் பங்கேற்கின்றனர்.

எமது நாடு போன்று ஆட்சியில் உள்ள அரசியற் கட்சிகளின் பிரச்சார விழாவாக தேசிய தினம் அமையாமல், கட்சிகளுக்கு அப்பாற்பட்ட ஒரு விழாவாக உள்ளது சிறப்பான அம்சமே.

இந்த வருடம் நோர்வேயின் 180வது தேசிய தினமாக 'சொத்தன மாய்' கொண்டாடப் பட்டது.

அரவிந்த்

www.tamilarangam.net

# இந்த இதழ் ஓவியம்

**ஓவியம்: குணா, ஒஸ்லோ**

"ஆடை குலைந்து நிற்கின்றாள் - அவள்
ஆவென் றழுது துடிக்கின்றாள்"





கலை இலக்கியக் காலாண்டிதழ்

தொடர்புகள்: 6 Square du Roule/ 92200 NEUILLY S/ SEINE/ FRANCE




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




MITCH LL, The Australian, Sydney






HENG
*LIANHE ZAOBAO*
Singapore






CUMMINGS i WINNIPEG FREE PRESS




KOSTAS, TA NEA/ATHEN.








PLANTU i LE MONDE

www.tamilarangam.net

# மறப்பதற்கு அழைப்பு

("அவர்கள் மட்டும் தமது பழைய கோரிக்கைகளை இறுதியாக மறப்பார்களெனின்" - சியோனிஸ்டுகளின் வாதம்)



'மடக்கதை கதையாதே'
.........என்கிறது காற்று.
'உலகம் சுழல்கிறது
எல்லாம் மாறுகிறது
முடிந்ததை நீ மறந்தே தீரவேண்டும்'

'நீ உன் வயலை மறக்கமுடியுமெனின்'
.........என்கிறது நஞ்சூட்டப்பட்ட பயிர்.
'நீ உன் வெள்ளை வீட்டை மறக்கமுடியுமெனின்'
.........என்கிறது இடிந்த கல்.
'பழுப்பு நிறக் குடத்தை நீ மறக்கமுடியுமெனின்'
.........என்கின்றன ஓட்டுத் துண்டுகள்.
'ஒலிவ் மரத்தை நீ மறக்க முடியுமெனின்'
.........என்கிறது மரக்குற்றி.
'தோடை மரங்களை'
.........என்கிறது எரிந்த தோப்பு.

'நீ உன் சகோதரியர் இருவரையும் மறக்கமுடியுமெனின்'
.........என்கிறது புதைகுழிகட்குச் செல்லும் பாதை.
'ஓலங்களை நீ மறக்கமுடியுமெனின்'
.........என்றன செவிகள்.

'அப்போது
அபாயத்துடன் விளையாடுவதை நீ நிறுத்தலாம்'

'பிடுங்கப்பட்ட விருட்சத்தின் விடுதலைபெற்ற
அத்திக் கனி போலக்
கப்பலின் உதரத்துள் நீ கடற்பயணம் போகலாம்
காற்றில் மணற் துளிபோல் விடுதலையைக் காணலாம்
முடிவில்
நீ இழந்த சொந்த மண்ணினின்று விமோசனம் பெறலாம்'

'உலகம் சுழல்கிறது
முடிந்ததை நீ மறந்தே தீரவேண்டும்
மடக்கதை கதையாதே'
என்கிறது காற்று -
உன்னைத் துரத்தினோரின் தரப்பினின்று வீசியவாறு.

எரிஷ் Fறீட்
(புலம்பெயர்ந்த ஒஸ்ற்றியக் கவிஞர்)

● தமிழில்: மணி



www.tamilarangam.net

www.tamilarangam.net



## என்ன நினைக்கிறார்கள்?

• அதிரடித் தகவல்கள்.

I

மே தினம், 1994. உலகத்தைக் கொண்டாட வைத்துக் கொண்டிருந்தது. பாரிஸிலும் தொழிலாளர்கள் தமது தினத்தை வீதிகளில் குழுமி நினைவுகூர்ந்தனர். தமிழர்கள்கூட இயக்கக் கொடிகள் படங்களைக் கையிலேந்தி ஊர்வலம் போய்க் கொண்டிருந்தனர். அதில் பெரும்பாலும் ஈழத்து அவலம் பற்றியும், இயக்கப் பிரசாரமும் இருந்தது:

பாரிஸ் நகரில் இன்னொரு பகுதியில் ஒரு தமிழரின் வீட்டினுள் உதவி கேட்டு நுழைந்தனர் இரு தமிழர்கள். மனைவி, மகன் முன்னிலையில் அத் தமிழரைச் சைலன்சர் பூட்டிய துப்பாக்கியால் பலமுறை சுட்டுவிட்டு, தொலைபேசித் தொடர்புகளைத் துண்டித்துவிட்டு சாவகாசமாகத் தப்பிச் செல்கின்றனர். இறந்தவர் எழுபதுகளில் திரள்கொள்ளத் துவங்கிய தமிழின எழுச்சியின், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவர். அவர்தான் சபாலிங்கம்.

இவர் அப்போது பரந்தன் இரசாயனக் கூட்டுத் தாபனத்தில் பணியாற்றி வந்தார். ஆயுதப் போராட்டமே தமிழ் மக்களது விடுதலைக்குச் சரியான வழி என நினைத்த ஒரு சிலரில் இவரும் ஒருவர். அப்போது பரீட்சார்த்தமாகக் குண்டுகள் செய்து பார்க்கப்படும் ஆரம்பக் காலகட்டம். இதனால் இரசாயனப் பொருட்கள் வாங்கினால் அரச மோப்ப நாய்களிடம் பிடிபட்டுவிடும் கடினமான காலம். அந்தக் காலகட்டத்தில் இவர் பலருக்கு இரசாயனப் பொருட்களைத் தமது கூட்டுத் தாபனத்தில் இருந்து எடுத்து வழங்கி வந்தார்.

பின் பாலத்திற்குக் குண்டுவைத்தார் என்ற சந்தேகத்தில் அரசால் கைது செய்யப்பட்டு பயங்கரவாதி என்ன முத்திரை குத்தப்பட்டு,புகழ்பெற்ற வதைக்கூடமான நான்காம் மாடியில் வைத்திருக்கப் பட்டபோது, அங்கிருந்து சித்திரவதை தாங்காது குதித்துத் தப்பமுயன்ற போது நாரிப்பகுதி முறிந்து தலைமறைவு வாழ்வை மேற்கொண்டவர். இதன் பின் பாரிஸில் வாழ்ந்த இவர் ஈழத்துக் கலை இலக்கியங்களுக்கு ஊக்கமளித்து வந்தவர்களில் முக்கியமானவர். பல



www.tamilarangam.net

நூல்களை வெளியிட்டார்; ஈழப் போராட்டத்தில் முக்கியமான பணியான ஆவணப் படுத்தலிலும் ஈடுபட்டார். இவரது கொலைக்கு இன்றுவரை யாரும் உரிமை கோரவில்லை.

இவரது கொலை பற்றிப் பல அபிப்பிராயங்கள் சொல்லப் படுகிறது. சில பிரபலங்கள், பிரமுகர்கள் இதன் பின்னணியில் இருக்கலாம் என நெருக்கமான ஒருவர் கூறினார்.

"இவர் அமைதியானவர், வம்புதும்புக்குப் போகமாட்டார். கணட்படி அரசியல் கதைப்பதில்லை. ஆனால் அவர் வெளியிடவிருந்த அடுத்த புத்தகமான ஆரம்பகால ஈழவரலாறு என்ற ஆதாரமயமான புத்தகம் பல முக்கிய தகவல்களைக் கொண்டிருந்தது. பல பேட்டிகள் மூலம் முக்கிய உண்மைகளை ஆதாரபூர்வமாக விளக்கக்கூடிய இந்நூல் தமக்கு ஆபத்தானது என்று கருதிய இயக்ககாரரே இந்தப் படுகொலையைச் செய்திருக்க வேண்டும்" என்ற கருத்து பரவலாகப் பாரிஸில் பொதுவேலை செய்பவர்களிடம் காணப்பட்டது. கொலை ஏற்படுத்திய பீதி பாரிஸ் முழுமையும் பரவி, ஒரு அரசியல் மௌனம் நிலவுகிறது. அபிப்பிராயம் கேட்டால், பெரிய இடத்துப் பகை ஏன் என்கின்றனர்.


தனிப்பட்ட பகை, பணப் பிரச்சனையால் நடந்திருக்கலாமா என்று கேட்டதற்கு, "இல்லை, தனது பையில் இருக்கும் பணத்தைப் புத்தகம் எதுக்காவது கொடுத்து விடுவார். சஞ்சிகை ஒன்றை வெளியிட்டுவந்த நண்பர் ஒருவருக்கு மூன்று இதழ்கள் வெளியிட முழுச் செலவையும் தானே ஏற்றவர். அந்த இதழை மாதாந்தம் வெளியிட உற்சாகப் படுத்தியவர்" என்ற பதில் வந்தது.

"அவரின் பிழையான அரசியற் கருத்து...." என்று கேட்டதற்கு, "அவர் இயக்க சார்பற்றவர். வழுவாத தேசபக்தன். தமிழர்களின் விடுதலையை நினைப்பவர். மனிதஉரிமை மீறல்களைப் பிழை என்று நினைப்பவர்" என்றார் சபாவைத் தெரிந்தவர் ஒருவர்.

ஐரோப்பாவிலும் கனடாவிலும் ஏற்கனவே பல அரசியல் வன்முறைகள் நிகழ்ந்துள்ளன. இயக்க மோதல்கள், இயக்கங்களை விமர்சிப்பவர்கள்மீது பல்வேறு இயக்கங்கள் கட்டவிழ்த்துவிட்ட வன்முறை, மிரட்டல் என்பன பல தடவைகள் நிகழ்ந்துள்ளன. ஆனால்



www.tamilarangam.net




இதுபற்றி மூத்த பத்திரிகையாளர் ஒருவர் கூறுகையில், "சிலருக்கு மேல்மட்ட ஆலோசனை வந்திருக்கலாம்" என்றார்.

சபாலிங்கத்தின் இறுதி ஊர்வலத்தில் 800முதல் 1000பேர் வரையிலான மக்கள் கலந்துகொண்டனர். இதில் பலர் உரையாற்றினர். இந்தத் தகவல்கூட அருகிலிருந்த பத்திரிகைகளுக்குத் தெரியவில்லை.

கொலையாளிகள் ஜேர்மனி அல்லது ஹொலண்டில் இருந்து கொண்டுவரப் பட்டிருக்கலாம் என்ற அபிப்பிராயமும் சிலரிடம் உள்ளது.

"ஏன் நீங்கள் இதுபற்றி எழுதவில்லை?" என்று ஐரோப்பாவின் புதிய சஞ்சிகை ஆசிரியர் ஒருவரைக் கேட்டதற்கு, "நான் அவயளிட்ட விசாரிச்சுப் பார்த்தன். அவர் (சபாலிங்கம்) இயக்கத்திலை நிறையக் காசு அடிச்சவராம்..... எப்படி நான் எழுதிறது?" என்றாராம்.

கொழும்பில் வெளிவரும் பத்திரிகை ஒன்று, சபாலிங்கத்தின் குடும்பத்தினர் இலங்கையில் 'கண்காணிக்கப்' படுவதாகச் செய்தி வெளியிட்டுள்ளது. இதுபற்றி யாரைக் கேட்பது?

நிறையவே கேள்விகள். விடைகள்தான் கிடைக்கவில்லை.

இதுதான் முதல் அரசியல்ப் படுகொலை.

இதனால் வெவ்வேறு அரசியற் கருத்துகளைக் கொண்ட பல அமைப்புகள் ஒருமித்த குரலில் தமது கண்டனத்தைத் தெரிவித்திருந்தன. பல நாடுகளில் வெளிவரும் 15க்கு மேற்பட்ட சஞ்சிகைகள் ஒன்றுசேர்ந்து துண்டுப் பிரசுரம் வெளியிட்டு இந்த அநியாய நிகழ்வைக் கண்டித்தன.

சில பத்திரிகைகள் தற்கொலைக்கும், சினிமாக் கிசுகிசுக்களுக்கும் பிரதான இடம்கொடுத்துப் பிரிசுரிப்பவை, இந்தப் படுகொலை பற்றிக் கடைசிப் பக்கச் செய்தியாக ஏனோதானோ எனச் செய்தி வெளியிட்டன. எல்லா விசயத்திலும் கண்டித்துத் தலையங்கம் எழுதுவனகூட இதுபற்றிக் கண்டுகொள்ளவில்லை.

## II

இலங்கை அரசின் பயங்கரவாதம் தமிழர்களுக்குப் புதியதல்ல. பெருமளவில்

www.tamilarangam.net

தமிழர்களைக் கொன்று குவித்துவிட்டுப் பயங்கரவாதிகள், புலிகள் செத்தார்கள் என்று செய்தி வெளியிடும் அரசுக்குத் துணைபோகும் இனவாதப் பத்திரிகைகளில் ஒன்றான ஐலண்ட் சபாலிங்கம் கொல்லப்பட்டமை பற்றி விழுந்தடித்து எழுதியது. அது மட்டுமல்ல சில நாட்களின் பின் மீண்டும் மூன்று தமிழர்கள் அடுத்தடுத்து இயக்கத்தால் கொல்லப் பட்டார்கள் என்று பெரும் தலைப்புச் செய்தி வெளியிட்டது. இதுபற்றி விசாரித்தபோது "அப்படியா? எங்கே? கனடாவிலா, லண்டனிலா" என்று பாரிஸ்வாழ் தமிழர்கள் கேட்கின்றனர். உண்மையில் அப்படி ஒரு சம்பவம் இதுவரை நடந்ததாகத் தெரியவில்லை. இனவாதப் பேனாக்களின் புழுகுதான். அதுவும் கற்பனையில் செத்தவர்களுக்குத் தமிழ்ப் பெயர் போட்டிருந்தது. இதை நினைத்துச் சிரிப்பதா அழுவதா? ஒரு சிங்கள அறிஞர், "மைக்குப் பதிலாகத் தமிழர்களின் இரத்தத்தையே இவர்கள் பேனாவில் நிரப்பி எழுதுகிறார்கள்" என்று கூறியது நினைவு வருகிறது.

**ராகவன்**

# தொடக்கம்....



இதுவே முடிவு இல்லை
இன்றே புதிதாய்த் தொடங்க
இதயம் கொள்
இனிய நண்பனே.

அதோ உரத்த குரலில் பாடுகிறான்
நிக்கலஸ் கில்லன்
அதிரும் கிட்டார்
முறுக்கேறும் நரம்புகள்.
சனநாயகம் பேசி

சர்வாதிகாரி ஆன
அரசியல் வாதியிடம்
நீதி கிடைக்குமா, தோழனே
நீதி கிடைக்குமா?

தாகமென்றால் உன் ரத்தத்தைக் குடிப்பான்
பசியென்றால் உன் தசையையும் கேட்பான்
அவனை மறந்துவிடு, நண்பனே
அவனை மறுத்துவிடு.

என் வீட்டுக் கதவுகள்
என்றும் திறந்தே இருக்கும்
என் இதயம் போலவே.....

என்றும் நீ வரலாம்
ஒரு தென்றலைப் போல....
என்னருமை தோழனே
ஒரு தென்றலைப் போல......

இதுவே முடிவு இல்லை
இன்றே புதிதாய்த் தொடங்கு.

**● கனிவண்ணன் (தமிழ்நாடு)**

www.tamilarangam.net

## அத்தியாயம் 4

எங்குபோய் இதைக் கரைக்கலாம்.
எங்குபோய் இதயம் வெடித்து அழலாம்.
எங்குபோய் நெஞ்சம் குமுறலாம்.
எங்குபோய் என் சோகம் தீர்க்கலாம்.
எங்குபோய் இருந்து இருகண்ணீர் விடலாம்.
எங்குபோய் என்கதை கேளாய் என விழிக்கலாம்.
எங்குபோய் தொண்டை கரகரத்து விம்மி வெடிக்கலாம்.
எங்குபோய் எதுவும் தெரியாதவன் போல் நடித்துப் பின்னர் அசடுவழிந்து.... நான்தான்,

"என்பெயர் ரகுநாதன், தங்கை இறந்துவிட்டாள், சும்மா இல்லை. சயனைட் அருந்தி வீரமரணம் எய்திவிட்டாள். இந்தச் சோகத்தை நான் தாங்குகிறேன் என்றால் நானும் ஒரு வீரன்தானே. மக்களே இதை உணருங்கள்..... இறப்பவன் வீரனல்ல. இருப்பவன்தான் வீரன்"

என்று கத்தலாம்.

கந்தவனம் மாஸ்ரரின்ரை ஞாபகம் வந்தது. சைக்கிளை எடுத்துக்கொண்டு மாஸ்டரிட்டைப் போனான் ரகு.

"என்ன தம்பி ரகு இந்த நேரத்திலை. நான் கேள்விப் பட்டனான்தான். சந்திரா உம்மடை தங்கச்சியாய்ப் இருக்கலாம். ஆனா என்ரை ஒரு மாணவி. இண்டைக்கு இந்த ஊரே செத்தவீடு கொண்டாடுது. அது உமக்குப் பெருமைதானே. உமக்குப் பெருமை! எனக்குப் பெருமை! நீர் ஏன் இப்பிடிக் கலங்குறீர் எண்டு எனக்கு விளங்கேல்லை. சும்மா இரும். இப்ப என்ன செய்யலாம்? எல்லாரும் சாகிறதுதானே. குடிகாரச் சோமன் சாகேல்லையே. விதி எண்டு ஒண்டு வந்தா அது மனிசனை விடாது தம்பி. தம்பித்துரை மாஸ்ரர் ரியூசன் குடுத்திட்டு ஸ்கூட்டரிலை வரேக்கை






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'பிறேக்' கால் வழுக்கி... போஸ்ரிலை அடிபட்டுச் சாகேல்லையே?

சாவு எண்டிறது எப்ப வரும் எண்டு ஆருக்குத் தெரியும்"

கந்தவனம் மாஸ்ரர் ஒரு இடைவெளி விட்டார். அந்த இடைவெளியை ரகுநாதன் பயன்படுத்தினான்.

"மாஸ்ரர் எனக்கு ஒரு உதவி செய்யவேணும். நான் சுசீலாவைப் பாக்கவேணும்"

"தம்பி! நீர் இருக்கிற இந்த நிலையில நான் இதயும் செய்யாட்டி மனிசனில்லை. வாரும் நான் கூட்டிக்கொண்டு போறன். அவளின்ரை 'பெயரன்ஸிசி'ட்டைப் 'பொமிஷன்' எடுக்கிறது என்ரை பொறுப்பு. ஆனா நீர் என்ரை பேரைக் காப்பாத்த வேணும். ஒரு அரை மணித்தியாலம் தனிய இருந்து கதைச்சுப் போட்டுப் போடவேணும், சரிதானே. கண்ணைத் துடைச்சுப்போட்டு ஆயத்தமாகும், சட்டையைப் போட்டுக்கொண்டு ஓடியாறன்"

இந்த மாஸ்டருக்கு எப்பிடி நன்றிக்கடன் செலுத்தப் போறனோ தெரியேல்லை, எவ்வளவு riskஆன விஷயத்தையும் எவ்வளவு simpleஆக எடுக்கிறார். இது ஏதோ தன்ரை கடமை மாதிரி. அந்தாள் எங்கை? நான் எங்கை? என்ரை சோகமும் என்ரை confutionஉம். அந்தாளும் அவற்ரை moralஉம். ஆண்டவனே இது எங்கை கொண்டுபோய் என்னை முடிக்கப் போகுதோ தெரியேல்லை.

"சரி சரி.... தம்பி வாரும். ஆகலும் இருளமுதல் போய்ச் சேருவம். நீர் ஒண்டை மனதிலை நினைச்சு முடிவெடுத்து விட்டீரெண்டால், வேறையொண்டையும் பற்றி யோசிக்கக் கூடாது. பார்த்தீரே உம்மடை தங்கச்சி ஒரு முடிவெடுத்தாள். ஆரையன் கேட்டே முடிவெடுத்தவள்"

இரண்டு சைக்கிள்களும் ஒழுங்கை முடக்கால் திரும்பின. 15 வருடங்களுக்குமுன் ரகுநாதன் சுசீலாவைச் 'சுழட்டும்'பொழுது திரும்பிய அதே வளைவுதான். முன்பெல்லாம் ஒழுங்கையால் திரும்பும்பொழுது எவ்வளவு ஆனந்தம்.. எவ்வளவு இன்பம்... இப்பொழுது ஒழுங்கையே மாறி... 'கல்லுறோட்' எனப் பெயர் பெற்று... மரங்கள் தறிக்கப்பட்டு... சில புதுப் பணக்காரார்கள் முளைத்ததால் சில புதுக் கட்டிடங்களும் முளைத்து.... இந்த என் காதல் ஒழுங்கை இப்பொழுது ஒரு நகர - சீ - நரக ஒழுங்கையாய் - கால்களே சைக்கிளை மிதிக்க வெட்கப்படும் அளவிற்கு அழிந்து போயிற்று. மாஸ்டருக்கென்ன? அவர் பாட்டிற்குக் கடமையைச் செய்கிறார். நான் ஒன்றிலும் பற்றில்லாமல்... தங்கையைத் தொலைத்துவிட்டு.... சுசீலாவிடம் ஆறுதல் கேட்கப் போகிறேன்.

கூடாது!

போகக் கூடாது!

வெட்கம்.

வேண்டாம் விடு.

"மாஸ்டர்... மாஸ்டர்.... நான் வர விரும்பேல்லை. நான் வீட்டை போப்போறன்" உரத்துக் கூப்பிட்டான் ரகு.

சடாரென 'பிறேக்' பிடித்துத் திரும்பி,

"மூச்சுக் காட்டாமல் பின்னால வாரும்" எண்டு சொல்லிப் போட்டு மாஸ்ரர் சைக்கிளை மீண்டும் மிதிச்சுக் கொண்டிருந்தார்.

* * *

கலங்கிய கண்களுடனும் துடிக்கும் உதடுகளுடனும் ரகு சுசீலாவைப் பார்த்தான்.

கிட்டத்தட்ட அவளும் அதே கோலத்தில் அவனைப் பார்த்தாள்.

இருவரும் ஒன்றுமே பேசாமல் ஐந்து நிமிடங்கள் கழிந்துவிட்டிருந்தது.

மாஸ்ரர் பெற்றோரிடம் விடைபெற்றுக் கொண்டு போய்விட்டார்.

பெற்றோரும் ஏதோ தாங்கள் understandingஆன பெற்றோர்

www.tamilarangam.net

என்பதுபோல் இவர்களைத் தனியே விட்டு விலகிக் கொண்டார்கள்.

சுசீலா ரீ போடுவதற்காக ஆறாவது நிமிடத்தில் எழுந்து போய்விட்டாள்.

உண்மையில் நான் ஒரு மடையன். அவளைக் கட்டிப் பிடிச்சுக் கேவிக்கேவி அழலாம் இப்பொழுது. இப்ப அழாட்டி இனி எப்ப அழுப்போறாய்? அழுறதுதான் வாழ்க்கை எண்டா எப்பிடியும் அழுதிட்டுப் போலாம், ஒப்பாரிதானே பலவகையாய் இருக்கு. உண்மையிலை நான் அழுறதுக்கு மட்டும் சுசீலாட்டை வரேல்லை.

பின்னை எதுக்கு வந்தனி?

பழைய காதலைத் தொடரவோ?

பழைய காதலுக்குப் புதிய விளக்கம் தேடியோ? நீ மடையன்தான்.

சுசீலா 'ரீ'யுடன் வந்தாள். 'ரீ'யை மேசையில் வைத்துவிட்டு அமர்ந்தாள்.

"நீங்கள் நல்ல உறுதியான ஆள் எண்டு நான் நினைச்சன்" என்று சொன்னாள் சுசீலா.

"எதிலை?" எண்டு கேக்கலாமோ எண்டு நினைச்சுப்போட்டு நடுங்கும் கைகளால் ரீயை எடுத்தான் ரகுநாதன்.


"ரகு நீங்கள் எல்லாத்தையும் உள்ளுக்கை வைச்சுக் குமையக்கூடாது, ஆருக்கன் சொல்லி அழவேணும். அப்பதான் ஆறுதலாய் இருக்கும்"

ரகுநாதனுக்கு இப்பதான் மேலும் அழுகை பொத்துக்கொண்டு வந்தது.

"please ரகு ஏன் இப்பிடி இருக்கிறியள்? உங்களைத் தேற்றிக் கொள்ளுங்கோ. சந்திராவின்ரை சா ஒரு நல்ல சாத் தான். அதோடை அவா நல்லவா. என்னோடை நல்லாக் கதைக்கிறவா. தெண்டிச்சு அதை மறக்கப் பாருங்கோ. புதிய வாழ்க்கையை வாழ try பண்ணுங்கோ. உங்கட சோகங்கள் எல்லாம் எனக்குத் தெரியும்"

இவள் எதைப் பற்றிக் கதைக்கிறாள்? எதை மறக்கச் சொல்கிறாள்? எந்தச்

# இலங்கையும் வளர்கிறது



கடந்த சுவடுகள் இதழில் 'மாது' என்பவர் ஆசிய நாடுகளான சீனா, இந்தியா, மலேசியா, தாய்லாந்து, வியத்நாம் போன்றவையின் வளர்ச்சியைப் பற்றிக் குறிப்பிட்டு இலங்கையின் பொருளாதார வளர்ச்சியைப் பற்றிக் கேள்விக்குறி எழுப்பியிருந்தார்.

கடந்த 2.4.94ல் சுவீடனில் இருந்து வெளியாகும் Dagens Nyheter பத்திரிகையில் வெளியான இலங்கை பற்றிய செய்தியை அறிந்துகொள்வது இலங்கையர் என்று குறிப்பிடப்படும் எங்களுக்குப் பிரயோசனமாக இருக்கக்கூடும்.

இலங்கையின் பங்கு வியாபாரம் மிகவும் இலாபத்தைத் தருகிறது. ஆசிய நாடுகளிலேயே மிகவும் அதிக வளர்ச்சியாக கொழும்புப் பங்குச் சந்தையானது 5/93 - 2/94க்குள் 147% வளர்ச்சியைக் காட்டுகிறது.

இலங்கையின் ஏற்றுமதியானது கடந்த வருடம் 21% அதிகரித்துள்ளது. பல வெளிநாட்டு நிறுவனங்கள் சமீபத்தில் அதிகளவில் இலங்கையில் முதலீடு செய்திருப்பதால் பொருளாதார வளர்ச்சி வீதம் கடந்த வருடம் 5.8%.

ஜெயம்

சோகம் தெரியும் எண்டிறாள்? நல்லூர் மஞ்சமும் என் அட்டகாசமான கடிதங்களும்... அவள் பிரிந்ததால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நானடைந்த சோகங்களுமா அல்லது அவள் தனக்குத் தானே சொல்வதை எனக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறாளா? ஒண்டும் புரியவில்லை. ஆனால் அவள் ஒரு சிறந்த நடிகை என்பது மட்டும் புரிந்தது. பாத்திரம் அறிந்து நேரம் அறிந்து சூழல் அறிந்து வார்த்தைகளை இடைவெளி விட்டு அழகாகப் பேசுகிறாள்.

ரீயைக் குடித்துவிட்டு மேசையில் வைத்தான் ரகு. ஓரளவு தெம்பாய் இருந்தது. இப்பொழுது சுசீலாவை வடிவாகப் பார்க்க முடிந்தது. நீலப் பாவாடை, நீலச்சேலை.... என வளர்ந்து இப்பொழுது நீலத்தில் 'நைற்றி'யுடன் ஒரு 'ரவலை'த் தோளில் போர்த்தியபடி எதிரே குந்தியிருந்துகொண்டு கதாகாலட்சேபம் செய்கிறாள்.

"ரகு வீட்டை போய் ஏதாவது ஒரு நல்ல புத்தகத்தை எடுத்து வாசியுங்கோ.



இல்லாட்டி ஏதாவது ஒன்றை நினைத்துக் கொண்டு மூச்சை உள்ளேயும் வெளியேயும் இழுத்துவிட்டுத் தியானம் செய்யுங்கோ. எல்லாம் பறந்திடும்" என்றாள்.

மிகுந்த சிரமப்பட்டு ரகு வாயைத் திறந்தான்.

"சுசீலா, எனக்கொரு help பண்ணுவீங்களா? நீங்கள் கடந்த காலத்திலை சங்கீதத்திலை கரைச்சனீங்கள் எண்டு கேள்விப்பட்டன. இப்ப எனக்காக ஒரு 'சஹானா'வில் அல்லாட்டி 'நீலாம்பரி'யில் ஏதாவது ஒரு உருப்படி அல்லது ஆலாபனை பாடுவீங்களா?" - கெஞ்சினான் ரகு.

"இப்பவோ? உங்களுக்கென்ன விசரே! 'பிரக்டிக்கலா' இருங்கோவன். இப்ப என்னாலை பாடேலாது. நீங்க வீட்டை போய் ஆகவேண்டிய அலுவலைப் பாருங்கோ"

ரகுநாதன் எழுந்தான்.

ரூமைவிட்டு வெளியே வந்தான். வீட்டுக் 'கேற்'றைத் திறக்கும்பொழுது சுசீலாவைத் திரும்பிப் பார்த்தான்.

சுசீலாவின் முகம் அப்படியேதான் இருந்தது. அவள் உள்ளுக்குள் 'நீலாம்பரி'யில் தன் சக்தியெல்லாம் கூட்டி தாலாட்டிக் கொண்டிருப்பது போல் ரகுவிற்குப் பட்டது. அது உண்மையாகவுங்கூட இருக்கலாம். ஆனால் அவள் பேச்சு அதை நம்ப மறுத்தது.

ரகுநாதனின் சைக்கிள் நேரே 'தவறணை' நோக்கிச் சென்றுகொண்டிருந்தது.

(வரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







வருடாந்தம் அநியாயமாக ஓரிலட்சம் பெண்கள் இறந்துபோகிறார்கள். காரணம் கருக்கலைப்பு.

2025ம் ஆண்டளவில் உலக சனத்தொகை இப்போதைய வீதத்தில் அதிகரித்தால் 710கோடியாக ஆகிவிடும். முறையான கருத்தடை முறைகள் கையாளப் பட்டால் 610 கோடியாக இருக்கும். இத்தகவல்களை யுனிசெ.:ப்பின் அறிக்கை ஒன்று கூறுகின்றது.

வளர்முக நாடுகளில் 12கோடிப் பெண்களுக்கு முறையான கருத்தடைச் சாதனங்கள் கிடைப்பதில்லை. தென்னாசிய, தென்னமெரிக்க, ஆபிரிக்க நாடுகளில் 90 வீதமான பிள்ளைகள் ஆரம்பக் கல்விப் பாடசாலைகளில் பதியப்பட்டாலும் மூன்றுநான்கு வருடங்களுக்குள் பாதிக்கு மேற்பட்டோர் பாடசாலையை நிறுத்தி விடுவதாகத் தெரிகிறது. காரணம் வறுமை. குழந்தைகள் குடும்பத்தின் வருமானத்திற்காக உழைக்க வேண்டிய நிலை அனேக குடும்பங்களில் சர்வசாதாரணம். இலங்கையிலும் இந்நிலையில் ஏராளம் குடும்பங்கள் உள்ளன. குறிப்பாக மலையக மக்களின் நிலை பல இடங்களில் இதுதான். அவர்களும் தமிழர்கள்தான். நமக்கென்ன?

www.tamilarangam.net

மீட்சி
தமிழ்த் தகவல் நடுவத்தின் மாதவெளியீடு. வருட சந்தா 12 பவுண்டுகள்.
தொடர்புகள்: Thamil House,/ 720 Romford road,/ London E12 6BT,/ UK.

# கர்ணன் கதை: தற்கால ஈழத் தமிழருக்கு ஒரு படிப்பினை

சில மாதங்களுக்கு முன்னர் திரு. சுகிசிவம் அவர்கள் லண்டன் ஆர்ச்வே முருகன் கோவிலில் ஆற்றிய உரையை, 'மத்தாப்பு' வீடியோ கலாசார இதழினர் வெளியிட்டுள்ளனர். (இப் புதிய வீடியோ இதழ் தற்பொழுது லண்டனிலுள்ள வீடியோக் கடைகளில் விற்பனைக்கு வந்துள்ளது.) இதில் சுகிசிவம் அவர்கள், மகாபாரதக் கதையில் வரும் கர்ணன் பாத்திரத்தைப் பற்றிய கதையம்சங்களை விளக்கி, நல்ல பல கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார்.

அர்ச்சுனன் தனது வில் வித்தைகளைச் செய்து காட்டிச் சபையில் பெரும் பாராட்டைப் பெற்று வில்லுக்கு விஜயன் ஒருவன்தான், இவனுக்கு நிகரானவர் பாரினில் யாரும் போர்க் கலையில் கிடையாது எனும் புகழை அடைந்தான். இவ்வேளையில் கர்ணன் சபையில் எழுந்து தன்னாலும் பல திறமைகளைக் காட்ட முடியும் எனக் கூறி அனுமதி கேட்க, திருதராஷ்டிரனும் அதற்கு அனுமதி கொடுத்தான். அர்ச்சுனன் முன்பு செய்து காட்டிய சகல சாகசங்களையும் இவன் செய்து காட்டியதுடன், அதற்கு மேலதிகமாகத் தான் துரோனாச்சாரியாரிடம் கற்ற வித்தைகளையுஞ் செய்து காட்டினான். அர்ச்சுனன்தான் மகா திறமைசாலி என எண்ணிய சபையினர்க்கு இது பெரும் ஆச்சரியத்தையும், ஏமாற்றத்தையுங் கொடுத்தது.

இவ்வேளையில், கர்ணன் அர்ச்சுனனை நேருக்கு நேர் பலப் பரீட்சைக்கு அழைத்தான். உடனே துரோனாச்சாரியார் குறுக்கிட்டு, அர்ச்சுனன் ஓர் அரச குமாரன் அவனைப் போருக்கு அழைக்க உனக்கு என்ன தகுதியிருக்கிறது? உனது குலம் என்ன என்று அறிய, உனது தகப்பன் பெயர் என்ன என்று தெரியாது. இந்நிலையில் நீ அர்ச்சுனனுடன் போர் புரிய முடியாது எனக் கூற, கர்ணன் மிக அவமானமடைந்து, கண் கலங்கிய நிலையில் மனமுடைந்து தலை குனிந்து போனான்.

உடனே துரியோதனன் எழுந்து, கர்ணனை வரவழைத்துத் தனது நாடுகளில் ஒன்றான அங்கத நாட்டிற்கு அரசனாக மணி முடி தரித்துத் தன் சிம்மாசனத்தில் தனக்கு அருகில் உட்கார வைத்து, இனிமேல் கர்ணன் ஒரு அரசன், இனிமேல் யாவரும் ஓர் அரசனுக்குத் தரவேண்டிய மரியாதையை அவனுக்குக் கொடுக்க வேண்டும் என்றான். கர்ணன் மனம் குளிர்ந்தது. இந்நிகழ்ச்சியை வாழ்நாள் முழுவதும் மறவேன் எனக் கர்ணன் கூறியதோடு, எந்த இடர் வரினும் துரியோதனனைத் தான் கைவிடப் போவதில்லை என முடிவெடுத்துக் கொண்டான்.

இக்கதையைக் கூறிய சுகிசிவம் அவர்கள் யாவருக்கும் ஓர் அறிவுரையையும் உபதேசித்தார். அதாவது ஒருவரிடம் உள்ள திறமையை அங்கீகரிக்க வேண்டும்; இல்லையேல் அவரைத் தீயவர்கள் பயன்படுத்தி விடுவர். இதுவே கர்ணனுக்கும் நடந்தது. தீயவர்களான துரியோதனாதியர், கர்ணனின் திறமையை அங்கீகரித்தனர்; கர்ணனும் தீயவர்கள் பக்கம் போனான். அங்கீகாரம்(Recognition) என்பது ஒரு முக்கியமான விடயம். இதனை உரியவர்கட்கு நாங்கள் கொடுத்தால் அவர்கள் நல்ல வழியில் நின்று நடப்பர்.

இன்று உலகில் நடக்கும் போர், கலகங்கள், பிரச்சினைகள் முதலியவற்றிற்கும் இவ்வங்கீகாரந்தான் முக்கியமான பிரச்சினை. இதனை உரியவர்களுக்கு வழங்காததாலேயே, உலகம் இன்று குழம்பிக் கொண்டிருக்கின்றது. எனவே நாம் தகுதியானவர்களை அங்கீகரித்து அவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்றார். □



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நோபல் பரிசு 93

இரசாயனத்திற்கான நோபல் பரிசு கடந்த வருடம், காறி.பி.முல்லிஸ் (Kary.B.Mullis) என்பவருக்கும் மைக்கல் ஸ்மித் (Michael Smith) என்பவருக்கும் சேர்த்து வழங்கப் பட்டது. இதற்கு இவர்களின் கண்டுபிடிப்பான பொலிமெறேசு தொடர் விளைவு (Polymerase chain reaction/ PCR) காரணமாய் அமைந்தது. 'Scientific American' சஞ்சிகைக்கு முல்லிஸ் அளித்த பேட்டியில் தான் பாவைவனத்தில் தனது காதலியை அணைத்தபடி செய்த ஒரு மோட்டார்வண்டிப் பயணத்தின்போதே இக்கண்டுபிடிப்பிற்கான பொறி தனது மூளையில் உதித்தது என்று கூறியிருக்கிறார். அது, 1983ல் நடந்திருக்க வேண்டும்.

## பழைய கண்டுபிடிப்பு

எனினும் இவ்விடயம் ஏற்கனவே 1960களில் ஷெல் க்ளெப்ப (Kjell kleppe) எனும் நோர்வேஜியரால் கண்டுபிடிக்கப் பட்டுவிட்டது. இவர் விஸ்கொன்ரின் பல்கலைக் கழகத்தில் கோபிந்த் குரானா (H.gobind Khorana) என்ற, நோபல் பரிசுபெற்ற அறிஞருடன் இணைந்து இக்கண்டுபிடிப்பைச் செய்திருந்தார். இதுபற்றி 1971ல் Journal of molecular biology எனும் சஞ்சிகையில் அவர்கள் கட்டுரை ஒன்றையும் பிரசுரித்திருந்தனர்.

## ஒழுக்கக்கேடான ஆராய்ச்சியும் நோபல் தேர்வுக்குழுவின் பிழையும்

ஆய்வாளர் பின்பற்றவேண்டிய ஒழுக்க நெறிகளில் ஒன்று, தமது ஆய்வுகளுக்கு முன்னோடியாயிருந்த விடயங்களைக் குறிப்பிடுதல் ஆகும்.

"ஒருவேளை க்ளெப்ப உயிருடன் இருந்திருந்தால் (இறப்பு 1988) அவரது பங்களிப்பும் கவனத்தில் எடுக்கப் பட்டிருக்கக் கூடும்" என அவரது மனைவி பேட்டி ஒன்றில் கூறியுள்ளார். இவரதும் க்ளெப்ப பணியாற்றிய பேர்கன் பல்கலைக்கழக ஆசிரியர்களதும் பலத்த கண்டனத்துக்கு உள்ளானது முல்லிஸ்ஸின் துரோகமல்ல; நோபல் தேர்வுக்குழுவின் தேர்வுக்கான விளக்கமே. இவ்விளக்கத்தில் குழு முல்லிஸ்ஸிற்குப் பரிசு வழங்கக் காரணம், அவர் பொலிமெறேசுத் தொடர் விளைவைக் <u>கண்டுபிடித்ததே</u> (பழைய கண்டுபிடிப்பை மெருகூட்டி வளர்த்தெடுத்தது அல்ல) என்று கூறியுள்ளது.

## பணம் புரளும் துறை

பொ.தொ.விளைவு முறையானது ஆய்வாளர் தமது சொந்த டி.என்.ஏ (DNA) - 'தொழிற்சாலை'யை உருவாக்க உதவுகிறது. ஒரு குறிப்பிட்ட பரம்பரை அலகின் 30கோடிப் பிரதிகளை ஓரிரு மணியில் உருவாக்க இம்முறை வழிவகுக்கிறது. மேலும் பரம்பரை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


அலகுகளின் உருவமைப்பை நிரல்படுத்தித தொகுக்க, கற்களிடையே பல்லாயிரம் வருடங்கள் முன் புதையுண்டுபோன உயிரினங்களின் (fossiles) டிஎன்ஏயைப் பிரதிபண்ண, குற்றவாளிகளை நிரூபிக்க என்று பல்வேறு துறைகளில் பொ.தொ.விளைவு முறை பிரயோகிக்கப் படும்.

இதற்கு பில்லியன் கணக்கில் பணம் புரளும் சந்தைவாய்ப்பு இருப்பதால் இம்முறைக்கான உற்பத்தி உரிமையைப் பெறுவதில் பெரும்போட்டி ஏற்பட்டது. இறுதியில் முல்லிஸ் பணிபுரிந்த Cetus எனும் நிறுவனமே இவ்வுரிமையைப் பெற்றது. (ஐரோப்பாவில் Hoffman – La Roche எனும் நிறுவனத்திற்கு இவ்வுரிமை விற்கப் பட்டுள்ளது)

**சக்தி**

## வெளிநாட்டவருக்கு வேலையுண்டு!

ஏனைய ஐரோப்பிய நாடுகளைப் போலவே நோர்வேயிலும் கடுமையான வேலையில்லாத் திண்டாட்டம் நிலவுகிறது. இதனால் இங்கு வாழும் வெளிநாட்டவர்கள் வேலை எடுப்பது கடினமாக உள்ளது. கல்வித் தகைமையும், திறமையும் இருந்தும் பலருக்கு நியாயமான வேலை கிடைப்பது கடினம். பொதுவாக வெளிநாட்டவர், தமது உண்மையான திறமையிலும் பார்க்கக் குறைவான வேலையையே செய்கின்றனர். இது தொடர்பாக வேலைவாய்ப்புத் திணைக்களம் சில புதிய திட்டங்களை அறிமுகம் செய்கிறது. இனக்குழுக்களிடையே நிலவும் வேலையில்லாப் பிரச்சனையை அருகிலுள்ள அட்டவணை காட்டுகிறது.




Tallene gjelder personer som var helt arbeidsledige i mai 1993.

© Aftenposten/K.I.

அகிலன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒரு முன்னுரை

ஸீக்ஃபரீட் லென்ஸின் "நிரபராதிகளின் காலம்" என்ற நாடகத்திற்கு ஜி.கிரிஷ்ணமூர்த்தி அவர்கள் எழுதிய முன்னுரையிலிருந்து............

ஸீக்ஃப்ரீட் லென்ஸின் ''நிரபராதிகளின் காலம்'' என்ற ரேடியோ நாடகம் 1961இல் ஒலிபரப்பாகியது. இந்த நாடகத்தை ஒலி பரப்பாத ஜெர்மன் ரேடியோ நிலையங்களே இல்லையெனலாம். எல்லா ஐரோப்பிய மொழிகளிலும் மொழி பெயர்க்கப் பட்டு ஐரோப்பிய ரேடியோ நிலையங்கள் அனைத்திலும் ஒலித்தது இந்த நாடகம். பிறகு மேடை நாடகமாகவும் வெற்றி நடை போட்டது. 1961இல் வெளியான இந்த நாடகத்தை இன்று தமிழில் மொழி பெயர்த்து வெளியிடுவதற்குப் பல காரணங்கள் உண்டு, தமிழ் வாசகர்கள் அக் காரணங்களை எளிதில் புரிந்து கொள்ள முடியும்: ஒருவித பயங்கர வாதத்தின் அடிப்படையில் எழும் சமூகம், வேறுவித பயங்கர வாதத்திற்கு அடிமையாகி விடுகிறது. ஜனநாயகம், சமதர்மம், சமூக நீதி, சிறு பான்மையர், பெரும்பான்மையர், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனிதாபிமானம் எல்லாமே கேலிக் கூத்தாகிவிடுகிற இந்த நிலையில், ஜாதி, மதம், இனம், கொள்கை, சீர்திருத்தம் என்பனவற்றின் பெயரால் வெறி என்ற எரிமலை வெடித்துச் சாதாரண குடிமகனின் சிந்தனைத் திறனை அழித்து விடுகிறது. அறிவுஜீவிகள் மௌனமாகி விடுகின்றனர் அல்லது களையெடுக்கப் படுகின்றனர். பல ஹிட்லர்கள் உருவாகும் சூழல் பிறக்கும்; வளரும்; மக்களை அடிமையாக்கும். இந்தியாவின் ஒருசில பகுதிகளிலும், இவ்வாறான பயங்கரவாதம் தலை விரித்து ஆடுகிறது.

ஸீக்ஃப்ரீட் லென்ஸ், ஜெர்மனியின் அரசியல், பொருளாதார, சமூக, கலாசார வளர்ச்சியைக் கூர்ந்து நோக்கி, அவற்றில் சில அம்சங்களை இலக்கியப் படைப்புகளின் வாயிலாக மக்கள்முன் வைப்பவர். நல்லது கெட்டதை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் கடமை எழுத்தாளருக்கு இன்றியமையாதது என்று கருதுபவர். அதற்காக ஒரு எழுத்தாளன் தன் நாட்டின் அரசியல் வளர்ச்சியில் நேரடியாகவும் பங்கு கொள்ள வேண்டும் என்று எண்ணிச் செயல் படுபவர். இன்று சோவியத் யூனியன், போலந்து நாடுகளின் ஒரு பகுதியாகி விட்ட கிழக்கு பிரஷ்ஷியாவில் 1926இல் பிறந்த ஸீக்ஃப்ரீட் லென்ஸ், இறுதிக் கட்டத்தில் ஜெர்மன் கடற் படையில் சேர வேண்டியிருந்தது. ஹிட்லரின் நாஜி ஜெர்மனியில் தனது இளமைப் பருவத்தைக் கழித்த அவர், ஹிட்லரின் கொள்கை வெறியால் நாடும், மக்களும் எவ்வாறு அழிவுப் பாதையில் அழைத்துச் செல்லப் பட்டனர் என்பதை நேரடியாகப் பார்த்து உணர்ந்தவர். அவருடைய முக்கிய இலக்கியப் படைப்புகள் எல்லாவற்றிலும் ஊடுருவி நிற்கும் ஒரு கேள்வி. மனிதன் எந்தச் சூழலில் குற்றவாளி ஆகிறான் என்பதே. தனி மனிதன் குற்றம் அல்லது சமூகத்திற்கே பொதுவான பொதுக் குற்றம் (Collective guilt) எவ்வாறு தோன்றிச் செயல் படுகிறது என்பதே அவர் படைப்புகளின் முக்கிய அம்சம். சர்வாதிகாரம், குறிப்பிட்ட மக்களை மற்றும் இனத்தவரை அடக்கி ஒழித்தல், தனிமனிதன் குற்றவாளியாக மாறுதல் போன்ற பின்னணியில் அவர் மனிதனை இனம் கண்டு கொள்ள உதவுகிறார். ஜெர்மனியில் தான் பார்த்து உணர்ந்த நிகழ்ச்சிகளைப் பற்றித்தான் அவர் எழுதியிருக்கிறார் என்றாலும், பாத்திரப் படைப்பு, கதைக் கரு, அதை விரிவாக்கும் விதம் போன்ற உத்திகளின் மூலம் குறிப்பிட்ட நாட்டின் எல்லைகளை மீறி, எந்த நாட்டிலும் இவ்வாறு நடக்கக் கூடும் என்று அவர் நம்மை எச்சரிக்கிறார். உதாரணமாக, 'நிரபராதிகளின் காலம்' என்ற இந்நாடகத்தில், நாடகம் நடக்கும் காலம், இடம் எது, எவ்விதமான சித்தாந்தம், எவ்விதமான சர்வாதிகார அரசியல் அமைப்பு செயல்

www.tamilarangam.net

படுகின்றன போன்றவற்றை வெளிப்படையாக விவரிக்காததன் மூலம், இந்த நாடகம் எல்லாக் காலத்துக்கும் பொருந்தும் என்று நம்மை உணர வைக்கிறார். எனினும் அவர் ஜெர்மன் நாட்டுக் குடிமகன்: நாஜி ஜெர்மனியில் நிகழ்ந்த கொடூரங்களை மனதில் வைத்துத்தான் எழுதுகிறார் என்பதால், நாஜி ஜெர்மனியைப் பற்றித் தெரிந்து கொள்வது வாசகர்களுக்குப் பயனளிக்கும்.

ஹிட்லர் எதையுமே மறைக்கவில்லை. 'என் போராட்டம்' என்ற தனது நூலில் அவன் எல்லாவற்றையும்—இனவெறி, மதவெறி, மக்களைச் சிந்திக்க விடாமல் சினிமா, நாடகம், இலக்கியம் வாயிலாக மூளைச் சலவை செய்வது, பொருளாதார, சமூகபலம் கொண்ட சிறுபான்மையினரை ஒழித்துக் கட்டுவது, முடிந்துபோன சரித்திரகாலச் சம்பவங்களுக்குப் பழி தீர்த்துக் கொள்வது— தெளிவாக விளக்கியிருக்கிறான்.

வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்துக் கட்டியதால் பெரும்பான்மையான ஜெர்மன் மக்கள் ஹிட்லரை ஆதரித்தனர். ஒருசிலரைத் தவிர, சாதாரண ஜெர்மன் குடிமக்கள் நாஜி சித்தாந்தம் அப்படியே நடை முறையில் செயல்படுத்தப் படும் என்று நம்பவில்லை. வேலை வாய்ப்பும், உண்ண உணவும், இருக்க வீடும் எல்லோருக்கும் கிடைத்ததால் அவர்கள் மகிழ்ச்சியுடன் ஹிட்லரின் அரசை


வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்துக் கட்டியதால் பெரும்பான்மையான ஜெர்மன் மக்கள் ஹிட்லரை ஆதரித்தனர். ஒருசிலரைத் தவிர, சாதாரண ஜெர்மன் குடிமக்கள் நாஜி சித்தாந்தம் அப்படியே நடை முறையில் செயல்படுத்தப் படும் என்று நம்பவில்லை. வேலை வாய்ப்பும், உண்ண உணவும், இருக்க வீடும் எல்லோருக்கும் கிடைத்ததால் அவர்கள் மகிழ்ச்சியுடன் ஹிட்லரின் அரசை ஆதரித்தார்கள். ஹிட்லர், ஆயுதங்களின் உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் உலகத்தை அடிமைப் படுத்த உலகப் போருக்குத் தயாராகிறான் என்பதை மக்கள் உணரவில்லை. அண்டை நாடுகளை ஆக்கிரமித்தபோது அங்கு வாழ்ந்த 'பச்சை ஜெர்மன்' மக்களைத் தவிர, வேறு இனத்தவரை, மொழியினரைக் கொடூரமான வழியில் அடக்கி ஒடுக்கினான் ஹிட்லர் என்பது மக்களுக்குத் தெரிந்தும் தெரியாமலும் இருந்த உண்மை. குறிப்பாக, யூத மதத்தினர் எவ்வாறு கொஞ்சம் கொஞ்சமாகக் கொலை செய்யப் பட்டனர் என்ற உண்மையும் இலைமறைவு, காய் மறைவாகத்தான் மக்களுக்குத் தெரிந்தது. சுமார் 60லட்சம் யூதர்களை நாஜி ஜெர்மனி கொலை செய்தது. இரண்டாவது உலகப் போருக்குப் பின் நாஜி அரசாங்க அட்டூழியங்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒவ்வொன்றாக வெளி வந்தபோது ஜெர்மன் மக்கள் தங்களைத் தாங்களே கேட்டுக்கொண்ட கேள்வி: உலகப் புகழ் பெற்ற சிந்தனையாளர்கள், கவிஞர்கள், இலக்கிய கர்த்தாக்கள், நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானிகள், தத்துவவாதிகள், இசைக் கலைஞர்கள் தோன்றிய ஜெர்மனி ஏன் ஹிட்லரையும் உருவாக்கியது? யூதர்களைப்



பூண்டோடு அழிக்க முனைந்து, அதில் பெருமளவுக்கு வெற்றியும் பெற்ற நாஜி கொடுங்கோலர்களுக்கு ஏன் ஜெர்மனி வழி வகுத்தது? உண்ண உணவும், இருக்க இடமும், உடுக்க உடையும் கொடுக்கும் அரசைப் போற்றிய மக்கள், அதனுடைய மிருகத் தனமான மற்ற கொள்கைகளையும் அன்று ஏன் ஏற்றுக் கொண்டார்கள்? ஜெர்மன் அறிவுஜீவிகளும் அன்றாட வாழ்க்கையை நினைத்துத்தான் செயலிழந்து நின்றார்களா? தாய்நாடு, இனம், மொழி என்பனவற்றின் பெயரால் அரசு புரிந்த கொடுங்குற்றங்களில் தனிப் பிரஜை ஒருவனின் பங்கு என்ன? நாட்டைத் தழுவிய, சாமானிய மக்களையும் உள்ளடக்கிய 'பொதுக் குற்றங்களில்' (Collective guitt) தனி மனிதன் கைவிட்ட தார்மீகப் பொறுப்பும் உள்ளடங்கியுள்ளதல்லவா?

உலகப் போருக்குப் பின் அழிவுற்ற ஜெர்மனியின் ஒரு பகுதி, மேற்கு ஜெர்மனி, ஜனநாயக நாடாக மீண்டும் பொருளாதார பலம் பெற்று எழுந்தபோது, மேற்கூறிய கேள்விகளுக்கு இலக்கிய ரீதியாகப் பதிலளித்தவர்களில் ஸீக்ஃப்ரீட் லென்ஸ்'ம் ஒருவர். அவருடைய நாடகங்கள், நாவல்கள், சிறு கதைகள் எல்லாமே மேற்கூறிய பிரச்சினைகளைக் கருவாகக் கொண்ட படைப்புகள். பொருளாதார

www.tamilarangam.net

பலம் பெற்று ஜெர்மனி மீண்டும் பணக்கார நாடாகத் திகழத் தொடங்கியபோது, ஜெர்மன் மக்கள் தங்களுடைய அண்மைக்கால (நாஜி–கால) சரித்திரத்தைப்பற்றிப் பேசத் தயங்கினார்கள். அக்காலத்தில் நிகழ்ந்த குற்றங்கள் எல்லாம் மறந்துவிட வேண்டியவை என்றும் நம்பினார்கள். ஆனால் போர்க்காலக் குற்றங்களைப் பற்றிய வழக்குகள் நியூரன்பெர்க் போன்ற நகரங்களில் நடந்தபோது, நாஜி–ஜெர்மனியைப் பற்றிய முழு விவரங்களும் வெளியானபோது, இளைய தலைமுறையினர்–ஹிட்லர் ஆட்சியின்போதோ, அதற்குப் பிறகோ பிறந்தவர்கள்– எவ்வித மனக்கசப்புக்கும் ஆளாகாமல் போர்க்காலக் குற்றங்களைப் பற்றி விவாதித்தனர். அன்றைய எழுத்தாளர்களும் அதில் தங்கள் படைப்புகளின் மூலம் சிறந்த பங்கை ஆற்றினார்கள். நாஜிக் கட்சிக்கு மட்டுமல்லாமல், எல்லா ஜெர்மன் நாட்டுக் குடிமகனுக்கும்– நேரடியாக இல்லாவிடினும்– அன்று நடந்த குற்றங்களில் மறை முகமான பங்கு உண்டு என்பதை இலக்கிய கர்த்தாக்கள் ஒளிவு மறைவு இன்றி மக்கள்முன் வைத்தார்கள். அன்று புரிந்த பாவங்களுக்கு இன்றுவரை மேற்கு ஜெர்மனி பிராயச்சித்தம் செய்து வருகிறது.

* * * * * * *

ஸீக்ஃப்ரீட் லென்ஸின் படைப்புகள் எல்லாமே தனிமனிதன் குற்றத்தை அடிப்படையாகக் கொண்டவை என்று ஆரம்பத்தில் கூறினேன். 'நிரபராதிகளின் காலம்' நாடகத்தில் அவர் கேட்கும் இரண்டு கேள்விகள்:

–'பொதுக் குற்றம்' என்று ஒன்று உள்ளதா?

–ஒரு குற்றம் நடக்க வேண்டுமென்று ஒருவன் மனதால் விரும்பி, அவ்வாறான குற்றம் நிகழும்போது, அதில் நேரடியாக எந்தப் பங்கும் கொள்ளாத ஒருவன் குற்றவாளியா, இல்லையா?

எவ்வாறு சாமானியர்கள் சர்வாதிகார ஆட்சியை எதிர் கொள்கிறார்கள், அந்த சர்வாதிகார ஆட்சியின் குற்றங்களுக்கும், அவர்களுக்கும் எவ்விதமான தவிர்க்கமுடியாத தொடர்புகள் ஏற்படுகின்றன,


அவ்வாறான நிலையில் அவர்கள் எந்த அளவுக்கு அவர்களாகவே முன்வந்து சர்வாதிகாரத்துடன் ஒத்துழைக்கிறார்கள் போன்ற பிரச்சினைகள் லென்ஸின் நாடகத்தில் விவரிக்கப் பட்டு ஆராயப் படுகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சர்வாதிகாரி ஒருவனின் உயிருக்கு உலைவைக்க முயலுகிறது ஒரு கோஷ்டி. சர்வாதிகாரியின் இரண்டு மெய்க்காப்பாளர்கள் சுட்டுக் கொல்லப் படுகின்றனர். சர்வாதிகாரி தப்பிவிடுகிறான். கொலை முயற்சியில் நேரடிப் பங்கு கொண்ட ஸாஸோன் கைது செய்யப்



படுகிறான். சர்வாதிகாரியின் காவல்துறையினர் எவ்வளவு கொடூரமாக அவனைச் சித்திரவதை செய்தபோதும், அவன் தன் கூட்டாளிகளின் பெயர்களைக் கூறவோ, தன்னுடைய கொள்கைகளை விட்டு விடவோ மறுக்கிறான். சமூகத்தின் வெவ்வேறு மட்டங்களின் பிரதிநிதிகளாகக் கருதக் கூடிய ஒன்பது நிரபராதிகளைப் பிணைக் கைதிகளாக்கி, அவர்களிடம் ஸாஸோனை ஒப்படைக்கிறான் அந்த சர்வாதிகாரி. தெரிந்துகொள்ளவேண்டிய விபரங்களை ஸாஸோனிடமிருந்து வரவழைக்க அவர்களுக்குக் கட்டளை இடப்படுகிறது. பிணைக் கைதிகள் எல்லோருமே எந்த விதமான சட்ட விரோதச் செயல்களுக்கும் ஆளாகாத நிரபராதிகள், அரசியல் சார்பற்ற குடிமக்கள். தங்களுக்கு நேர்ந்த இழி நிலையைப் பற்றியே வாய் ஓயாமல் நொந்து கொள்ளும் நிரபராதிகள், ஸாஸோன் மட்டுமே தங்களுடைய இந்த இழி நிலைக்குக் காரணம் என்று அவனிடம் மோதுகிறார்கள். முதலில் கெஞ்சுகிறார்கள், பிறகு அவன் உள்ளத்தைத் தொட வைக்கும் என்று நினைத்து அவனுடைய மனிதாபிமானத்தைப் பற்றிப் பேசுகிறார்கள்.

www.tamilarangam.net

சர்வாதிகாரியுடன் ஒத்துழைக்க ஸாஸோன் முன் வர வேண்டுமென்று வாதமிடுகிறார்கள். ஒன்பது நிரபராதிகளின் சுதந்திரம் ஒரு தனி மனிதனின் கொள்கையைவிடப் பெரிது என்று அறிவுபூர்வமாகத் தர்க்கம் செய்கிறார்கள். ஸாஸோன் எல்லாவற்றிற்கும் பதில் கூறி அவர்கள் வாயை அடைக்கிறான்.

*என்னிடம் என்னதான் எதிர் பார்க்கிறீர்கள்? மூச்சு விடாமல் நீங்கள் எல்லோரும் எனக்கு ஒரு எண்ணிக்கை விகிதாசாரத்தைப் பற்றிச் சொல்கிறீர்கள். நீங்கள் சொல்வது எல்லாம் நாங்கள் ஒன்பதுபேர், நீ ஒருவன் மட்டும்தான் என்பதுதான். உலகத்தில் நம்மைத் தவிர வேறு மனிதர்களே இல்லையென்றால் நீங்கள் என் மன நிலையை மாற்றியிருக்க முடியும். அந்த நிலையில் நான் என்ன செய்ய வேண்டுமென்று எனக்கும் தெளிவாயிருக்கும். ஆனால் வெளி உலகில் கோடிக் கணக்கான மக்கள். அவர்களுடைய துயரம் கலந்த பெருமூச்சை என்னால் இங்குகூடக் கேட்க முடிகிறது. உங்கள் நியாய வாதத்தை உங்கள் முன்னே இப்போது வைக்கிறேன். இம்மக்கள் துயரங்களை எதிர்த்துப் போராடும் என் நண்பர்களின் பெயர்களை இம் மக்களின் நன்மையைக் கருதி நீங்கள் ஏன் கேட்காமல் இருக்கக் கூடாது? சிறுபான்மையினர் பெரும்பான்மையினர் நலத்திற்க்காகத் தியாகம் புரிய வேண்டும் என்று நீங்கள் கருதுவது உண்மையென்றால், நீங்கள் ஏன் தியாகத்திற்குத் தயாராக இல்லை?*
நிரபராதிகளுக்கு ஸாஸோனின் வாதத்தில் உள்ள உண்மையைப் புரிந்துகொள்ள முடியவில்லை. வாசகர்கள் ஸாஸோனின் இந்தக் கூற்றைத் தவறாகப் புரிந்து கொள்ள முடியும். ஸாஸோனின் வாயிலாக லென்ஸ் வாசகர்களுக்குக் கூற வரும் விஷயமே வேறு. மனைவி மக்களுக்காகவும், உத்தியோகத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவும், தன் உயிரை எப்படியாவது காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்பதற்காகவும் அன்று ஹிட்லர் அரசுடன் ஒத்துழைத்த ஜெர்மன் மக்களை நமக்கு நினைவுபடுத்தி, வாசகனாகிய நீங்களும் இவ்வாறுதான் நடந்து கொண்டிருப்பீர்களா என்று கேட்கிறார் லென்ஸ். ஸாஸோனின் பேச்சுத் திறனில் வாசகன் மயங்கி தன் சுய சிந்தனா சக்தியை இழந்து விடக் கூடாது என்று வாசகர்களிடம் முன்கூட்டியே வேண்டிக்கொள்கிறேன்.

ஸாஸோனிடம் மேலும் முறையிட்டுப் பார்த்ததில் எந்தவித நன்மையும் கிடைக்காது என்ற கட்டத்தில் நிரபராதிகள் அவனை அடித்துத் துன்புறுத்திப் பார்க்கிறார்கள். இரவு நேரம் வந்து, நிரபராதிகள் சிலர் களைத்துத் தூக்கத்தில் ஆழ்கிறபோது, யாரோ ஒருவன் ஸாஸோனின்

www.tamilarangam.net

கழுத்தை நெரித்துக் கொன்று விடுகிறான்.

தானோ, தனது காவல் துறையினரோ செய்ய வேண்டிய காரியத்தை 'நிரபராதிகள்' 'தாங்களாகவே' நிறைவேற்றி விட்டதால் அவர்கள் விடுதலை செய்யப் படுகிறார்கள். இத்துடன் முதல் அங்கம் முடிகிறது.

சர்வாதிகாரியை விரட்டிவிட்டு ஆட்சியைக் கைப்பற்றிய ஸாஸோனின் கட்சி 'நிரபராதிகளை' மீண்டும் கைது செய்து காவலில் வைக்கிறது. யார் ஸாஸோனைக் கொன்றவன் என்பதை 'நிரபராதிகளே' தீர்மானிக்க வேண்டும் என்று கட்டளையிடப் படுகிறது. ஒவ்வொரு 'நிரபராதிக்கும்' ஸாஸோனைக் கொல்வதற்கான காரணங்கள் இருந்தன என்பது வெளிப்படுத்தப் படுகிறது. இவ்வாறான பாத்திரப் படைப்புகளின் மூலம், ஹிட்லர் ஆட்சியில் எவ்வாறு ஒவ்வொரு குடிமகனும் அந்த ஆட்சியின் குற்றங்களில் பங்கு கொள்ளவேண்டி வந்தது என்பதைத் தெளிவாக எடுத்துரைக்கிறார் லென்ஸ்.



'நிரபராதிகளின்' ஒரு கூற்றை மட்டும் இங்கு நாம் தெரிந்து கொள்வது அவசியம்: 'அன்று நடந்தது எல்லாமே கட்டாயத்தின் பேரில்.' அதற்கான விளக்கத்தையும் லென்ஸ் நம்முன் வைக்கிறார்: மேலிட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உத்தரவுக்கு அடிபணிந்து கொலை செய்வது நம் காலத்தின் ஒரு தனிச் சிறப்பு. (யூதர்களைக் கும்பல் கும்பலாகக் கொலை செய்த நாஜி– கொலைகாரர்களின் போர்க்காலக் குற்றங்களை ஆராய்ந்த நீதி மன்றத்தின் முன் இதைத்தான் அடிக்கடி கூறினார்கள்.)

மேலிட உத்தரவுக்கு அடிபணிந்து குற்றம் புரிந்தவர்களை மட்டும்தான் லென்ஸ் குற்றவாளியாகச் சித்தரிக்கிறார் என்று நினைக்கக் கூடாது. ஒரு கொடிய செயலுக்குத் தூண்டும் நிலையை உருவாக்குவதில் பங்கு



கொள்வதன் மூலமோ, அல்லது அக்கொடிய செயல் நிகழும் காலகட்டத்தில் 'நமக்கு என்ன' என்று வாளாவிருப்பதன் மூலமோ ஒருவன் குற்றவாளியாகிறான் என்கிறார் லென்ஸ். தனக்கும் அரசியலுக்கும் சம்பந்தம் இல்லை என்று கூறுவதனால் நாஜி ஜெர்மனியில் நடந்த நிகழ்ச்சிகளுக்குத் தான் பொறுப்பேற்க முடியாது என்ற சாமர்த்தியமான தர்க்காப்பு வாதத்தைத் தகர்த்து உடைக்கிறார் லென்ஸ். யூதர்களை தெருவில்ப் போட்டு உதைத்தபோது, அவர்கள் கடைகளைச் சூறையாடிய போது, அவர்களுடைய ஆலயங்களுக்குத் தீ வைக்கப்பட்டபோது, அவர்கள் கைது செய்யப் பட்டதைப் பார்த்துச் செயலிழந்து நின்ற போது, கைதிகள் முகாம்களில் யூதர்கள் கொல்லப்பட்டதை அறிந்தும் அறியாமல் இருந்தபோது, ஜெர்மன் குடிமகன் அவற்றைத் தடுக்க எந்தவித முயற்சியிலும் இறங்காதது அவனைக் குற்றவாளியாக்கி விட்டது என்று லென்ஸ் வலியுறுத்துகிறார். அவர் படைத்த பாத்திரம் ஒன்று நாடகத்தில் கூறுகிறது: *''எவன் வாழ விரும்புகிறானோ அவனை அவன் மனதுக்குப் பிடிக்காத விஷயங்களைச் செய்யக் கட்டாயப் படுத்த முடியும்''*




## சந்தையைச் சுமந்துவந்த பைத்தியம்

### முகமட் அபார்

அவள் –
இன்றும் வந்தாள்
இரத்தத்தைக் குடித்தபடி

ஒரு கையும் இல்லை.
ஒரு காலும் இல்லை.
ஷெல் விழுந்த பனைபோல்
அசிங்கமாய் இருந்தாள்.

கண்ணால் அழுதாள்.
மூக்கால் சிணுங்கினாள்.
இடைக்கிடை
தலையை சுவரில் முட்டினாள்.
அன்று இருந்த
பெண் உருவங்களை



## அப்பாவிச் சனங்களின் சந்தை

### சோலைக்கிளி

அந்தச் சந்தை
பேயாகி அலைவதாக சொல்லப்படுகிறது,
நான் நம்பவில்லை.

ஊரின்
மூலையிலே நிற்கின்ற
பெரிய ஆலமரத்தில் அன்றிரவு
அந்தச் சந்தை
அலறிக்கொண்டு தூங்கியதாக,
நேற்றும் ஒருவர்
ஒரு பொது இடத்தில் கதைத்தார்,
நான் ஏற்கவில்லை.

போன வெள்ளிக்கிழமை
தான் படம்பார்த்து வரும்போது,

www.tamilarangam.net

இன்று அவளில் காணவில்லை
ஒரு முலையும்....
கட்டை முடியும்.....

அழுக்குகளை
கையால் அள்ளி
அரிசி என்றாள்.
தெரு நாய்களைப் பிடித்து
சுறாமீன்....
திருக்கமீன்
என்றெல்லாம் உளறினாள்.

அடிக்கடி -
கத்தரிக்காய்
வெண்டிக்காய்
என்று கூறிக்கொண்டு
கிடுகுவேலிக் கம்புகளை
கார்ந்து கார்ந்து துப்பினாள்.

பார்ப்பதற்கு நல்ல காட்சி,
ரசிப்பதற்கு அவள் நல்ல பைத்தியம்.

அந்த -
குண்டு வெடித்த சந்தை
அவளில் -
அப்படியே தெரிந்தது.

16.01.94

முச்சந்தியில் நின்று
அந்தச் சந்தை
மிகவும் உஷாராக இயங்கியதாகவும்,
அதை வளைத்து
மாடுகளும் ஆடுகளும் மேய்ந்ததைப் போலவும்,
தான் கண்டதாய்
அந்தப் பையன் சொன்ன கதையைக்கூட
என் மனம்
ஒரு பொருட்டாகத் தூக்கவில்லை.

மீன்பெட்டி எமனாகி
வெடித்துப் பறந்த சந்தையது.
எத்தனையோ உயிர்கள்
போன இடம்.


இருந்தாலும்,
அது பேயாய் அலைவதுவை
என்னால் இயலாது ஏற்க,
என்றிருந்தேன்;
அந்தப் பெண்மணி சொன்ன
கூவிக்கொண்டு சந்தை
இரண்டு வண்டிகள் சாமான் இறக்க அதற்குள்
போன புதன்கிழமை
நள்ளிரவுக்குப் பின்
கடற்கரை ஓரத்தில் குந்தி இருந்த
படலத்தைக் கேட்டபின்பும்.

26.12.93



www.tamilarangam.net

www.tamilarangam.net



## மீட்பு

புயல் துரத்த
புயலோடு
அள்ளுண்டோடி வரும்
புழுதிப் படை துரத்த
கடல் துரத்த
கருமூஞ்சி
கொப்பழித்துப் புரளும்
முகில் துரத்த
இருள் துரத்த
இருட்டாள்கையில்
விழிகள் தணல் சீற
ஆந்தை துரத்த
வனம் துரத்த
வளமாய் குடல் தின்ன
வனவஞ்சக
நரி துரத்த
பேய் துரத்த
பேய்க்குப் பலிதேடி
பேயாய் அலையும்
பேயின் புதல்வர் துரத்த

ஓடிக் களைத்து
வீழ்ந்து
எழுந்து மீண்டும் ஓடி
புழுதிக்குள் புதைந்து

ஓடிக்களைத்து
புதைந்து
மீண்டும் எழுந்தோடி
முகிலில் மோதி

ஓடிக் களைத்து
மோதி
மீண்டும் எழுந்தோடி
ஆந்தை ஒளி பறிக்க

ஓடிக் களைத்து
ஒளியிழந்து
மீண்டும் தடம்மாறி ஓடி
பேய்க்குப் பலியாகி

தொடர்ந்தோட முடியாமல்
பேயின்
பாதாள மலக்குழிக்குள்
அழுகிய கழிவாய் சூரியன்.

புயலமர
புயலின்
புழுதிப் படை அமர
கடலமர
கருமூஞ்சி முகிலமர
இருளமர
தணல்விழி ஆந்தை அமர
வனம் அமர
வனத்திடை நரியமர
பேயமர
பேயின் புதல்வர் அமர
வந்தானென் சூரியன்
தீக் கரங்கள் விரித்து.

லட்சோப லட்சம்
மனிதக் கரங்கள்
பாதாள மலக்குழியிலிருந்தவனை
மீட்டு
சுமந்து நின்றன.

மக்கள்.
மக்கள் மீட்டனர்.
பாதாளச் சிறை கிடந்த
தமது சூரியனை
மக்கள் மீட்டனர்.

**தமயந்தி**
15.12.93

www.tamilarangam.net

கடந்த வருடம் நோர்வேயில் தத்தெடுக்கப்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கை 851. இவற்றில் அதிகமான பிள்ளைகள் வெளிநாடுகளில் இருந்தே தத்தெடுக்கப் படுகின்றன. பல ஆண்டுகளுக்கு முன் பெரும்பாலும் ஆசிய நாடுகளில் இருந்தே பிள்ளைகள் தத்தெடுக்கப் பட்டார்கள். கடந்த சில வருடங்களாக தென்னமெரிக்க நாடுகளில் இருந்து தத்தெடுக்கப் படுகிறார்கள். பொதுவாக வெளிநாட்டுப் பிள்ளைகளில் 70வீதமானவர்கள் மூன்று வயதுக்கு உட்பட்டவர்களே. ஆனால் தத்தெடுக்கப்படும் நோர்வேப் பிள்ளைகளில் 10வீதம் மட்டுமே மூன்று வயதுக்கு உட்பட்டவர்கள்.

கடந்த வருடக் கணிப்பில் அதிக அளவு பிள்ளைகள் (214) கொலம்பியா நாட்டில் இருந்தும், கொரியாவில் இருந்தும் (111) தத்தெடுக்கப் பட்டனர். இலங்கையிலிருந்து 8 பிள்ளைகளும், இந்தியாவில் இருந்து 45 பிள்ளைகளும் தத்தெடுக்கப் படுகின்றனர்.

தத்தெடுக்கப் பின்வரும் விதிகள் முக்கியமானவை.

* தத்தெடுப்போர் 25க்கும் 50க்கும் இடைப்பட்ட வயதுடையோராக இருத்தல் அவசியம்.
* திருமணமானவர்களாக, அதுவும் திருமணமாகி குறைந்தது இருவருடங்களாகி இருக்கவேண்டும். அதேவேளை தனியாள்கள் தத்தெடுப்பது சாத்தியம். ஆனால் நடைமுறையில் இருவரும் நடைமுறையில் சிறந்த பாதுகாப்பை வழங்குவதே அவசியம்.
* தத்தெடுப்போர் நல்ல உடல்நலம் உடையோராக இருத்தல் அவசியம்.
* நிலையான நிரந்தர வருமானம் இருக்க வேண்டும்.
* தத்தெடுக்கப்பட்ட பிள்ளை வளரும் வீட்டில் (குடும்பத்தில்) மிக இளம் நபராக இருக்க வேண்டும்.
* பெரும்பாலும் இரண்டுக்கு மேற்பட்ட பிள்ளைகளைத் தத்தெடுக்க, பிள்ளைகள் பிறப்புச் சகோதரர்களாக இருத்தல் அவசியம்.
* பொதுவாக தத்தெடுப்பதற்கான கால இடைவெளி ஒன்பது மாதம் முதல் 3,4வருடங்கள்வரை. இது ஒவ்வொரு மாநகரசபைக்கும் தனித்தனியே வேறுபடலாம்.

● ராஜன்.



# நீங்களும் தத்து எடுக்கலாமே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

..., A Tamil monthly from Norway, Issue nr56, April'94. (Published in june'94) Estd: Sept'88

# இனிக்கும் இரவும் புளிக்கும் பகலும்

**தம்பா**

போதை ஏறிய சனிநாள் ஒன்று
மாலையோரம் ஐரோப்பிய வீதியில்
சொர்க்கம் காணும் வெண்மனிதர்கள்.

கூனிக்குறுகிப் பிறநாட்டான் ஒருவன்
கூடுநோக்கி வேகமாகப் பறந்தபடி.
நானோ நமட்டுச் சிரிப்பில்
பரம்பரைப் போதை தலைநிறைக்க
நிமிர்நடை போட்டபடி.

பொறிதட்டக் கணம் சுழன்றது.
வலிகொட்டிப் பிளந்தது தாடை
சூழ்ந்தது கொடூரம்.
கடுக்கனும் கம்மலும்
குத்திட்ட முட்பன்றித்
தலைச்சோடனையோடும்
தினவெடுத்த நெடிய வெண்மலைகள்

நிமிடத்தில் நிலை சுதாரித்து,
"தப்பிப்போனது கணக்கு. நிறுத்தும்!
உம்போன்றே நானும் உயர்ந்தவன்
ஏரில் மனிதன் பூட்டி உழுதவன்
அடிமை, குடிமைகளுக்கு
காற்றில் கயிறு திரிக்கக் கட்டளை
இடுபவன்
கடவுளின் சீடனென
எனைத் தொழவைத்தவன்
நிமிர்ந்த தலைக்குக் கழுமரம் வைத்த
பெருமை எனக்குண்டு
நானோர் யாழ்ப்பாணத்து மேட்டுக்குடியாம்
புறத்தால் வக்கில்லா சூத்திர நாயும்
அரசியல்க் கயிறேறி வந்துள்ளது
முன்னாலோ, பின்னாலோ வரக்காணின்
தப்பாமல்ச் சொல்வேன்
உதையும், உடையும்
உம் கால் ஒற்றி மகிழ்வேன்
எனைப் போகவிடும்"

இப்போது
சந்திரனைக் கைதொட்ட மகிழ்வெனக். ..

"கற்றுக்கொள் கறுப்பு நாயே
சாகப்பிறந்த பன்றியே
தொழுவத்தைவிட்டு ஏன் வந்தாய் வெளியே?
கறுப்பர் அழிந்தால் மட்டும்
புனிதமடையும் பூமி!"

ஒரே கணத்தில் குறுக்கும் நெடுக்குமாக
பூமி சுற்றும் அதிசயம் எப்படி?
நெற்றி பிளர்
பிடரி தெரிந்த
கொட்டிப் பரவியது இரத்தம்
வானம் வெண்பூ தூவியபடி
குற்றுயிராய் நிலம் சாய்ந்து நான்
என்னுள்ளே வெப்பம் உறைய
குளிர் பற்றி எரிந்தது.

